# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 22 செவ்வாய்க்கிழமை (07.09.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 285


### சர்வாதிகாரத்துக்குத் துணைபோகிறது என்பதால்

# அரசமைப்புத் திருத்தத்தை கூட்டமைப்பு ஆதரிக்காது

### 13 ஆவது திருத்தச் சட்டத்தின் நற்பயன்களையும் பறிக்கிறது

கொழும்பு, செப். 7

அரசாங்கம் நாளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ள பதினெட்டாவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்காது.

இந்தச் சட்டத்திருத்தம் பதவியில் உள்ள ஜனாதிபதி இரண்டு தடவைகளுக்கு மேலும் பதவி வகிக்க வகை செய்து சர்வாதிகாரத்துக்கு வழி கோலுகிறது என்பதாலும் -

நிறைவேற்று, நீதி அதிகாரங்கள்சம்பந்தப்பட்ட அலகுகளில்அரசியல்செல்வாக்குக்குவகை செய்யும் பகுதிகளை உள்ளடக்கியதால் ஜனநாயக ஆட்சி முறைக்குக் குந்தகம் ஏற்படுத்தும் என்பதாலும் -

13ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் மூலம் தமிழ் பேசும் மக்களுக்கு வழங்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட நற்பலன்களையும் ஊறுபடுத்துவதாலும் -

புதிய அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை ஆதரிப்பதில்லை என்று கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## நெருக்கடியான சூழ்நிலையில் ஐ.தே.க. நாடாளுமன்றக் குழு இன்று கூடுகிறது

கொழும்பு, செப்.7

ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிக்களில் சிலர் அரமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவு வழங்கப் போவதாக பகிரங்கமாக அறிவித்துள்ள தற்போதைய நிலையில், அரமைப்புத்திருத்தம் நாளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது எம்.பிக்கள் எப்படி நடந்துகொள்வது என்பது குறித்து ஆராய்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழு இன்று கூடுகின்றது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இன்று முற்பகல் 10.30 மணியளவில் கூடி இது தொடர்பில் ஆராயவுள்ளோம் என எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

அத்துடன் அரசமைப்புத் திருத்தத்துக்குத் தற்போது ஆதரவளிக்க முன்வந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பிலும் இன்று ஆராயப்படவுள்ளது என ஜோன் அமரதுங்க எம்.பி. தெரிவித்துள்ளார்.

இதனிடையே, அரசமைப்புத் திருத்தத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றத்துக்குள்ளும், வெளியிலும் எதிர்ப்பைக் காட்டத் தீர்மானித்துள்ளது என்றும், உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை நடத்த ஐக்கிய தேசியக் கட்சி தயாராகி வருகின்றது என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இன்று இடம்பெறும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலான கலந்துரையாடலின் பின்னரே இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ-சி)

### சப்பறத்தில் சண்முகப்பெருமான்



நேற்று மாலைப் பொழுதில் பவனி

## அரசமைப்புத் திருத்தத்திற்கு எதிராக ஐ.தே.க. நேற்றுத் துண்டுப்பிரசுரம்

கொழும்பு, செப். 07

அரசமைப்புத் திருத்தங்களினால் நாட்டு மக்களுக்கு ஏற்படப்போகும் பாதிப்புகள் குறித்து மக்களைத் தெளிவுபடுத்துவதற்காக ஐக்கிய தேசியக் கட்சி நேற்று கொழும்பில் மக்கள் மத்தியில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தது.

கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவின் தலைமையில் கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக துண்டுப் பிரசுர விநியோகம் இடம் பெற்றது.

இதுதொடர்பாக திஸ்ஸ அத்தநாயக்க கூறியவை வருமாறு:-

அரசால் புதன்கிழமை (நாளை) நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள அரசமைப்புத் திருத்தம் இந்நாட்டுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. இதை இந்நாட்டு மக்கள் அறிந்துகொள்ளவேண்டும்.

நாட்டில் ஜனநாயகம், நல்லாட்சியை நிறுவுவதற்காக மக்கள் இந்த அரசுக்கு ஆணை வழங்கினார்கள். ஆனால், அரசு அந்த ஆணையைப் பிழையாகப் பயன்படுத்துகிறது.

அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்தல், பொருள்களின் விலைக ளைக் குறைத்தல் போன்ற நடவடிக்கைகள்தான் இப்போது மக்களுக்காக முன்னெடுக்கப் படவேண்டும். இதைத்தான் மக்கள் கேட்கின்றனர். அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டுவருவதன் மூலம் இவ்வாறான

(16 ஆம் பக்கம் பார்க்க)

## சன் சீ கப்பலில் ஏறுவதற்கு முன்னர் 6 இலங்கை அகதிகள் பரிதாபமாகப் பலி!

கொழும்பு, செப். 07

சன் சீ கப்பலில் ஏறுவதற்கு முன்னர் இலங்கை அகதிகள் 6 பேர் கடல் அனர்த்தம் ஒன்றில் பலியாகினர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சன் சீ கப்பல் மூலம் கனடா சென்றுள்ள இலங்கை அகதி ஒருவரை மேற்கோள்காட்டி இணையம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் டேவிட் பூபாலப்பிள்ளை இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

குறித்த பெண் உட்பட 7 பேர் இலங்கையிலிருந்து வெளியேறி மலேசியாவில் தங்கியிருந்தனர் என்வும், அவர்கள் பின்னர் மலேசியாவில் இருந்து தாய்லாந்துக்கு படகு மூலம் செல்ல முற்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மலேசியாவில் இருந்து தாய்லாந்து வரையான படகுப் பயணத்தின் போது ஏற்பட்ட விபத்து ஒன்றில், குறித்த பெண்ணுடன் வந்த 6 இலங்கை அகதிகளும் உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் குறித்த பெண் மாத்திரம் காப்பாற்றப்பட்டு, தாய்லாந்தில் தரித்திருந்த சன் சீ கப்பலில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் தமது கடற்பயணத்தில் முழுமையான பாதுகாப்பற்ற சூழ்நிலையை எதிர்கொண்டே இலங்கை அகதிகள் கனடா வருகின்றனர் எனவும் பூபாலபிள்ளை தெரிவித்துள்ளார். (ஒ-சி)

### தங்கத் தேரில் நல்லூரான் பவனி



நல்லூரில் வள்ளி, தெய்வயானை சமேதரராக ஆறுமுகப்பெருமான் அடியார்களுக்கு அருள் மழை பொழிய இன்று காலை 7 மணிக்குத் தங்கத் தேரில் வீதியுலா வருகின்றார்.

சிறப்பிதழ் உள்ளே

## நாடாளுமன்று இன்று கூடும்

கொழும்பு, செப். 07

நாடாளுமன்றம் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு கூடுகின்றது. அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணை இன்றைய தினம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

நாளை அரசமைப்புத் திருத்த யோசனை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு காலை 9.30 மணிமுதல் மாலை 7 மணி வரை அதன் மீதான விவாதம் இடம்பெறும். 7 மணிக்கு வாக்கெடுப்பு இடம்பெறும். (ஒ-சி)

## ஜே.வி.பி. இன்று ஆர்ப்பாட்டம் அரசமைப்புத் திருத்தத்தை எதிர்த்து

கொழும்பு, செப். 07

அரசமைப்புத் திருத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பி. இன்று பிற்பகல் மூன்று மணிக்கு ராஜகிரிய ஆயுர்வேத சுற்றுவட்டச் சந்தியில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துகின்றது.

இத்தகவலை ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

அரசு கொண்டுவரவுள்ள இந்த அரச

(16ஆம் பக்கம் பார்க்க)

## திஸ்ஸநாயகத்தின் மனு நேற்று வாபஸ்

கொழும்பு, செப்.07

சிரேஷ்ட ஊடகவியலாளர் ரி.எஸ்.திஸ்ஸநாயகம், பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் தாம் தடுத்து வைக்கப்பட்டதை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை நேற்றுத் திரும்பப் பெற்றுக்கொண்டார்.

இம்மனு உயர்நீதிமன்ற நீதியரசர்களான சலீல் மர்சூர் தலைமையில் சக நீதியரசர்களான எஸ்.ஐ.இமாம், ஆர்.கே.எஸ். சுரேஷ் சந்திரா ஆகியோர் முன்னிலையில் விசார

(16ஆம் பக்கம் பார்க்க)




உள்ளூர் நிகழ்வுகளை உலகறியச்செய்வோம்!
நல்லைக் கந்தனின்
உற்சவ காலத் திருக்காட்சிகள்
தினமும் உங்கள் உதயனின்
வலைத் தளத்திலும்....
www.uthayan.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாணக்கியமாகக் காய்நகர்த்துகிறார் ராகுல்; விஜய்காந்துடன் பேச்சு நடத்துகிறது காங்.

**தமிழக அரசியலில் பரபரப்பு**

சென்னை, செப். 07

விஜயகாந்துடன் தமிழக இளைஞர் காங்கிரஸ் தலைவர் யுவராஜா பேச்சு நடத்தியிருப்பது தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கூட்டணியே அமைக்க மாட்டேன், மக்களுடன்தான் கூட்டணி என்றெல்லாம் பேசி வந்த விஜயகாந்த், கடந்த மக்களவைத் தேர்தலில் அனைத்து இடங்களில் கட்டுப் பணத்தை இழந்ததையடுத்து கூட்டணிக்குத் தயார் என்றார்.



இந்நிலையில் அ.தி.மு.க. தரப்புடனும் விஜயகாந்த் சார்பில் சிலர் பேச்சு நடத்தி வருகின்றனர் எனச் செய்திகள் வருகின்றன. இதை தே.மு.தி.க. மறுக்கவில்லை.

இந்நிலையில் என்னை முதல்வராக ஏற்கும் கட்சியுடன்தான் கூட்டணி என்று விஜயகாந்த் திடீரென அறிவித்தார். மேலும் நேற்றுமுன்தினம் சிவகாசியில் பொதுக் கூட்டத்தில் பேசிய விஜயகாந்த், 30, 40 ஆசனங்களுக்காகவெல்லாம் கூட்டணி அமைக்க மாட்டேன் என்றார்.

இதனால் அ.தி.மு.க. இவருக்கு 40 தொகுதி கள் மட்டுமே தர முன் வந்துள்ளதோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இதற்கிடையே விஜயகாந்த்துடன் காங்கிரஸ் தரப்பும் பேச்சு நடத்தி வருகிறது. தமிழக இளைஞர் காங்கிரஸ் தலைவரான யுவராஜா சில நாட்களுக்கு முன் விஜயகாந்தை சந்தித்து நெடு நேரம் பேச்சு நடத்தியுள்ளார். ராகுல் காந்தியின் உத்தரவின் பேரிலேயே அவர் விஜயகாந்தைச் சந்தித்தார் எனக் கூறப்படுகிறது.

ஆனால், வரும் சட்டமன்றத் தேர்தலில் தி.மு.கவிடம் அதிக இடங்களைப் பெறவே விஜயகாந்த்தைப் பயன்படுத்தி காங்கிரஸ் மறைமுக மிரட்டல் விடுகிறது எனக் கூறப்படுகிறது. அதிக தொகுதிகள் தராவிட்டால் விஜயகாந்துடன் சேரவும் தயங்க மாட்டோம் என்பதுதான் ராகுல் காந்தியின் இந்த செயல்களுக்கு அர்த்தம் எனக் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் தி.மு.க. பணிந்து, அதிக தொகுதிகளைத் தந்து கூட்டணியைத் தொடர்ந்தாலும், வரும் சட்டமன்றத் தேர்தலோடு தி.மு.க. உறவை வெட்டிக் கொண்டு, தே.மு.தி.கவுடன் கைகோக்க ராகுல் முடிவு செய்துவிட்டார் எனவும் பேசப்படுகிறது.

இந்நிலையில் தே.மு.தி.க. அவைத் தலைவர் பண்ருட்டி ராமச்சந்திரன் ஈரோட்டில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேசுகையில், தே.மு.தி.க. தொடங்கப்பட்டு 5 வருடம் ஆகிறது. கட்சிக்கு மக்களின் ஆதரவு பெருகியுள்ளது. வரும் சட்டமன்றத் தேர்தலில் கூட்டணி சேர்ந்து போட்டியிடுவது என்று இப்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. தேர்தலில் தி.மு.கவைத் தோற்கடிக்க வேண்டும் என்று மக்கள் நினைக்கிறார்கள்

இன்னும் 10 ஆண்டுகளில் தமிழகத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் மாபெரும் சக்தியாக தே.மு.தி.க. விளங்கும் - என்று கூறினார். (ஒ-சி)


**யாழ். மாவட்ட தனியார் பாரஊர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**

**ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் - 2010**

*காலம்* : 12.09.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி
*இடம்* : கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்
*தலைமை* : திரு. இ. அரிகரன் அவர்கள் (சங்கத் தலைவர்)

**நிகழ்ச்சி நிரல்**

01. இறைவணக்கம்
02. தலைமையுரை
03. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் உரை
04. சென்ற கூட்ட அறிக்கை வாசித்தல்
05. கணக்காய்வறிக்கை 2008 சமர்ப்பித்தலும் 2009, 2010 கணக்கறிக்கை சமர்ப்பித்தலும்
06. வரவு செலவுத் திட்டம் 2010இற்கான அங்கீகாரம் பெறல்
07. சேமம் மீளளிப்பு தொடர்பாக ஆராய்தல்
08. அங்கத்தவர் பிரேரணைகள்
09. சங்க உபவிதிக்கமைவாக பணிப்பாளர் சபைத் தெரிவு
10. நன்றியுரை

சகல அங்கத்தவர்களும் குறித்த நேரத்துக்கு சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். (அங்கத்தவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்)

*இருபாலை வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (சி/570727)

கூட்டுறவுச் சேவையிலுள்ள
க.இலங்கநாதன்,
செயலாளர்.



**நல்லையில் இருந்து நம்துயர் தீர்க்க வாராயோ முருகா!....**

*சேட், சூட்டிங், புதிய டிசைன்களில் திருமண வைபவ கோட் வகைகள், பேஸ், கப், பெல்ற் வகைகள் மற்றும் தையல் இயந்திரம், உதிரிப்பாகங்கள், தையல் பொருள்கள் என்பனவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் குறித்த தவணையில் தையல் வேலைகளையும் செய்துகொள்ளலாம்.*



குறிப்பு: கொழும்பு விலையில் தையல் இயந்திரங்களான **HARA5550 New Model, HARA 8700, JUCK 5550** என்பனவற்றையும் பெற்றுக்கொள்ளலாம்.

**சிற்றிசன் போய்ஸ் செலெக்ஷன் அன் ரெயிலர்ஸ்**

*✱ புதிய பழைய மொடல் வெடிங்கோட் வாடகைக்கும் விடப்படும்.*

*இல. 302, பலாலி றோட், ஆலடிச்சந்தி, திருநெல்வேலி.*

*உரிமையாளர்:* **செ.டயேந்திரா**
**T.P.:0776143301**


## பிரமோஸ் ஏவுகணை சோதனை வெற்றி

ஒலியை விட சுமார் 3 மடங்கு வேகத்தில் பாய்ந்து செல்லும் பிரமோஸ் ஏவுகணை சோதனை வெற்றிகரமாக நடந்தது.

ஒரிசா மாநிலம் பலசோர் அருகே உள்ள ஒருங்கிணைந்த ஏவுகணைச் சோதனை மையத்தில் 'பிரமோஸ்' ஏவுகணைச் சோதனை நேற்றுமுன்தினம் நடந்தது. மூன்றாவது சோதனை வளாகத்தில் இருந்து காலை 11.35 மணியளவில் ஏவுகணை செலுத்தப்பட்டது. திட்டமிட்டபடி, குறிப்பிட்ட இலக்கை அந்த ஏவுகணை தாக்கியதால் சோதனை வெற்றி பெற்றது.

'இது இந்திய இராணுவத்தினரால் நடத்தப்பட்ட சோதனை என்றும் முழு அளவில் சோதனை வெற்றி பெற்றுள்ளது' என்றும் ஐ.டி.ஆர். இயக்குநர் எஸ். [illegible] தெரிவித்தார். (ஒ-சி)

# மரண அறிவித்தல்

## திருமதி சின்னத்தம்பி இராசமணி

கெருடாவில் தெற்கு தொண்டமானாற்றைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி இராசமணி நேற்று (06.09.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆண்டி மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும் சின்னத்தம்பியின் பாசமிகு மனைவியும் தவராசா (சுவிஸ்), யோகராசா (சுவிஸ்), ஞானகலை, ஞானராசா (சுவிஸ்), ரஞ்சிதராசா ஆகியோரின் பாசமிகு தாயாரும் சாந்தினி (சுவிஸ்), ஜெயகௌரி (சுவிஸ்), சாந்தரூபன் (கிராம அலுவலர் அச்சுவேலி தெற்கு), ஆகியோரின் அன்பு மாமியாரும் கமலாதேவி, திலகவதி, மனோன்மணி, இந்திரசித்தன் காலஞ்சென்ற சண்முகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சாதனா, தனுஷன், தர்மிஸன், யுவனியன், ஆர்த்திகா, சாருகாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று இன்று (07.09.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தொண்டமானாறு காட்டுப்புலம் இந்துமயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
**குடும்பத்தினர்**
**பு.சாந்தரூபன் (கிராம அலுவலர்)**
*தொ.பே: 021 321 3042*

*கெருடாவில் தெற்கு,*
*தொண்டமானாறு.*

## 5ஆம் பக்கத்தில் தவறான படங்கள்

இன்றைய உதயனில் 5ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ள கைதடி நவீல்ட் பாடசாலை தொடர்பான படங்களில் வேறு இரு படங்கள் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக மாறிப் பிரசுரமாகிவிட்டன.

பொருத்தமான படங்கள் நாளைய உதயனில் பிரசுரமாகும் என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம். (ஆ-ர்)

## சௌந்தர்யா தம்பதியை அறிமுகப்படுத்தி ரசிகர்களுக்கு விருந்தளிக்கின்றார் ரஜினி

சென்னை, செப்.7

தனது மகள் சௌந்தர்யா திருமணத்தைத் தொடர்ந்து, மண மக்களை ரசிகர்களுக்கு அறிமுகப்படுத்தி விருந்து வைக்க நடிகர் ரஜினி திட்டமிட்டிருக்கிறார்.

சௌந்தர்யாவின் திருமணம் கடந்த 3 ஆம் திகதி சென்னையில் நடைபெற்றது. இதையொட்டி ரஜினிகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், மகளின் திருமண விழா மற்றும் மாலையில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்திய அனைவருக்கும், பரிசு பொருள்கள் அனுப்பி வாழ்த்துத் தெரிவித்தவர்களுக்கும் நன்றி தெரிவித்திருக்கிறார்.

மேலும் அந்த அறிக்கையில், 'எனது மகளின் திருமண வைபவத்தை முன்னிட்டு, என்னுடைய ரசிகர்கள் அனைவரையும் குடும்பத்தினருடன் அழைத்து, மணமக்களை உங்களுக்கு அறிமுகப்படுத்தி விருந்து வைக்க நான் ஆசைப்படுகிறேன். அது முடியுமானால், அதை நிறைவேற்ற நான் கண்டிப்பாக முயற்சி செய்வேன்' என்றும் ரஜினிகாந்த் தெரிவித்திருக்கிறார்.

# கண்ணீர் அஞ்சலி

*யாழ்.ரெலிகொம் நிறுவன சக ஊழியர்*
**எம்.ரமேஷ்குமார்**
*அவர்களின் அன்புத் தாயார்*

**திருமதி மார்க்கண்டு நாகம்மா**

*அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.*

**1998ஆம் ஆண்டு ரெலிக்கொம் அணி நண்பர்கள்:**
**உமா, கேதீஸ், அன்பு, டக்கன்ஸ், சுரேஷ், துரைசிங்கம், இராமச்சந்திரன், நிறைஞ்சன், சந்திரன், ராஜா, செல்வரத்தினம், கேசவன்.**

*(சி-570740)*

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பரமேஸ்வரி அழகராசா (குஞ்சு)



காவில், கரணவாய் கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி அழகராசா (குஞ்சு) அவர்கள் 04.09.2010 சனிக்கிழமை இறை பதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா தங்க முத்து தம்பதியினரின் இளைய மகளும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகளும் சோம சுந்தரம் அழகராசாவின் அன்பு மனைவியும் சுஜிந்தனின் பாச மிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.09.2010) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.பகல் 2 மணியளவில் கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***காவில்,***
***கரணவாய், கரவெட்டி.*** (101757)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## திருமதி பொன்னம்மா தம்பிஐயா



சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா தம்பிஐயா 04.09.2010 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை மாரிமுத்து தம்பதியினரின் புத்திரியும் காலஞ்சென்றவர்களான சீனியர் சிவகாமி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சீனியர் தம்பிஐயாவின் (இளைப்பாறிய மேற்பார்வையாளர், ஒட்டுப் பலகைக் கூட்டுத்தாபனம், சுன்னாகம்) அன்பு மனைவியும் பராசக்தி, ஆறுமுகம் (பட வரைஞர் யாழ்.கச்சேரி), மகாலட்சுமி, இராஜலட்சுமி, இரத்தினசிங்கம் (நெதர்லாந்து), மகேஸ்வரி, பரமேஸ்வரி, துரைசிங்கம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தருமலிங்கம், தவமணி, அமரர் நவரத்தினம் மற்றும் இரட்ணராஜா, கல்பனா (நெதர்லாந்து),புஸ்பராசா, ரங்கநாதன், ராதா (லண்டன்) ஆகியோரின் மாமியும் மதியழகன் (நெதர்லாந்து), விஜயகுமாரி, புஸ்பகுமாரி (கனடா), மகேந்திரன் (பிரான்ஸ்), அஜேந்திரன் (பிரான்ஸ்), சசிகலா, தாசன், தயாபரன், சிவாகரன், சிவகுமாரி, மாதவன் (போலந்து), மயூரி, ரஜினி, தவேந்திரன் (லண்டன்), அஷ்வினி, தர்சிகா, இராகசெல்வி (நெதர்லாந்து), இராகசுதா (நெதர்லாந்து), பிரகலாதன் (மலேசியா), கிருபகலாதன், அஜந்தன் புருஷோத் (லண்டன்), தருணிகா (லண்டன்), ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் டிலக்ஷன், தரண்யா, அபிநயா, சர்மிலன், ஆரபி, கீர்த்தனா, கேஷினி, அபிவர்ஷா, சதுர்ஷனா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.09.2010) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***சில்லாலை தெற்கு,***
***பண்டத்தரிப்பு.*** (103029)

தகவல்:
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## உடனடியாக அவசரமானதா இது?

அரசமைப்புச் சட்டத்தை திருத்தும் அரசாங்கத்தின் முடிவு சம்பந்தமான பிணக்கு நாட்டில் சூடுபிடித்து வருகிறது. அது குறித்து எதிரும் புதிருமான வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. அரசமைப்புச் சட்டத் திருத்தத்துக்குச் சார்பாகவும் எதிராகவும் மத பீடாதிபதிகளின் ஆதரவைத் தேடும் அளவுக்கு போட்டா போட்டி வலுத்து வருகிறது. அதனையொட்டி நாட்டின் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் சூழலும் கருக்கட்டுவதற்கான சாத்தியங்கள் மெல்லியதாகத் தென்படுகின்றன.

அரசமைப்புத் சட்டத்துக்கு ஆதரவு வழங்கக் கோரி அரசாங்கத் தரப்பும் ஆதரிக்கக் கூடாது என்று எதிர்க் கட்சித் தரப்பும் மகாநாயக்க தேரர்களிடம் சென்று அதன் சாதக பாதகங்களை விளக்கி அவர்களைத் தம்பக்கம் இழுக்க முயல்வது இதில் ஓர் அத்தியாயமாகிறது.

எட்டாம் திகதியை ஐக்கிய தேசியக் கட்சிகளின் தொழிற்சங்கங்கள் கரிநாளாகப் பிரகடனம் செய்திருப்பதும், ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்திருப்பதும் அரசமைப்புச் சட்டத்திருத்தத்தை முன்னிட்டு தலைநகரில் குழப்பங்களுக்கு இடமுண்டு என்பதனைக் கோடிட்டுக் காட்டுவனவாக உள்ளன.

அரசாங்கம், (மிகக் குறிப்பாக அரச தலைவரான ஜனாதிபதி) உத்தேச 18ஆவது அரசமைப்புச் சட்டத்தினை வெற்றிகரமாக 'புல்டோஸிங்' செய்துவிட முடிவு கட்டியுள்ளது. அதற்கான வாக்குப் பலத்தையும் திரட்டிவிட்டது. எதிர்த் தரப்பினரோ அன்றி நியாய சிந்தை உள்ளவர்களோ, துறைசார் நிபுணர்களோ, நாட்டு நலன் விரும்பிகளோ, எவர்தான் எதிர்த்தாலும், தான் செய்வது முழுக்க முழுக்கச் சரியே என்று குதர்க்கம் பேசும் அளவுக்கு அரசு இரும்புப் பிடியை இறுக்கிக் கொண்டிருக்கிறது.

அரசமைப்பு என்பது அத்துறைசார்ந்த அறிஞர்களும், புத்திஜீவிகளும் தெரிவிக்கும் கருத்தியலின் பிரகாரம் -

* அரசமைப்பு என்பது அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் சங்கிலி.
* அது அறிவுசார்ந்த புலமைசார்ந்த, அரசியல் கோட்பாட்டு விழுமியங்களைக் கொண்டிருக்க வேண்டும்.
* அதனை பொதுமக்களின் மேலோட்டமான உணர்வுகளுக்குத் தீனிபோடும் முயற்சியாக நோக்கக் கூடாது.
* அரசமைப்பு ஒன்றை இயற்றுவதற்கும் சட்டம் ஒன்றை ஆக்குவதற்கும் இடையில் நிறைய வேறுபாடுகள் உள்ளன. சட்டம் ஒன்றை இயற்றுவதற்கு கடைப்பிடிக்கப்படும் நெறிமுறைகளை அரசமைப்பை ஆக்குவதற்கு கையில் எடுக்கமுடியாது என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.
* மக்களின் இறைமை என்பது, கட்டுப்படுத்த முடியாத அரசியல் தற்கொலைக்கு உரிய உரிமை அல்ல என்றும், இன்னும் பல காத்திரமான அம்சங்களைக் கொண்டது என்றும் சுட்டிக்காட்டுகிறார்கள்.

மேலும் -

அரசமைப்பில் திருத்தம் கொண்டுவருவதை நாடாளுமன்றம் - அதில் அங்கம் வகிப்பவர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்ற காரணத்துக்காக - செய்வது ஜனநாயக விரோதமான செயற்பாடு என்றும் சட்டவல்லுநர்கள் எடுத்துச் சொல்கிறார்கள்.

ஜனநாயகம் என்பது நாடாளுமன்றில் வெறும் பெரும்பான்மைப் பலம், மூன்றில் இரண்டு மடங்கு பலம் இருப்பின் அரசாங்கம் மக்கள் நலன் நாடாமல் அவர்களின் கருத்து அறியாமல், தான் விரும்பும் எதனையும் தனக்குச் சாதகமாக அர்த்தப் படுத்தி நடைமுறைப்படுத்தலாம் என்பதல்ல.

அதனாலேயே நாட்டுக்கு முக்கியமான மக்கள் நலனின் மேம்பாட்டுக்கான விடயங்களுக்கு, சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்று ஜனநாயக விதிமுறை உலகளாவிய ரீதியில் கைக்கொள்ளப்படுகிறது.

மேலும் -

அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கு அதனூடு ஜனாதிபதியின் பதவிக்காலத்தை அதிகரிப்பது, நாட்டு மக்களுக்கு அவசரமாகத் தேவைப்படும், தீர்க்கப்படவேண்டிய ஒரு கைங்கரியம் அல்ல. அது ஆற அமர யோசித்து, மக்கள் கருத்தறிந்து ஆற்றப்பட வேண்டிய ஒன்று. இனப்பிரச்சினை மற்றும் மக்களின் வறுமை நிலை, பட்டதாரிகளே தொழில் தேடித் தெருவில் திரியும் அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் என உடனடியாகக் கருத்தில் கொள்ள வேண்டிய, தீர்க்கவேண்டிய மக்கள் பிரச்சினைகளை ஓரங்கட்டிவிட்டு, ஒரு தனி மனிதருக்கு அவர் நாட்டின் தலைவர் என்ற பதவியில் அமர்ந்துள்ளார் என்பதற்காக, அவரது பதவிக்காலத்தை நீடிப்பதற்கு, வலுப்படுத்துவதனை ஸ்திரமாக்கிக் கொள்வது எந்த வகை ஜனநாயகம் என்பது புரிந்து கொள்ள முடியாத விசித்திரமாக உள்ளது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் அவர் மேலும் ஆறு வருடங்களுக்கு ஆட்சி நடத்த மக்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள். வாஸ்தவம்தான்.

எத்தனை தடவையும் அவர் அதிகாரம் மிக்கவராகத் தொடர்வதற்கோ அல்லது அதற்காகப் போட்டியிடுவதற்கோ மக்கள் ஆணை கொடுக்கவில்லை. அவ்வாறிருக்க அதற்கான முன்னுரிமையோ அவசரமோ அவசியம் என்பது தர்க்கரீதியில் தாழ்ந்து நிற்கிறது; ஜனநாயகத் தராசில் உயர்ந்து தொங்குகிறது.

# அரசமைப்பு திருத்தங்கள் குறித்து மக்கள் மத்தியில் விவாதிக்க வேண்டும்

## அவசரம் தேவையில்லை என்கிறது தேர்தல் கண்காணிப்பு அமைப்பு

கொழும்பு,செப்.7

அரசமைப்பில் மாற்றத்துக்கான எந்தவொரு முன்மொழிவை முன்வைத்தாலும் முதலில் அது வாக்காளர் மக்களோடும் கற்றறிந்த சமூகத்தவர்களோடும் விவாதிக்கப்படவேண்டும். அவசர முடிவுகள் எடுப்பதற்கு முன்னர் இவ்வாறு விவாதிக்கப்படுவது அவசியம்.

இவ்வாறு வலியுறுத்தியுள்ளது சுதந்திரமும் நியாயமுமான தேர்தல்களை வலியுறுத்தும்(பவ்ரல்) அமைப்பு. அவ்வமைப்பின் தலைவர் ரோகன ஹெட்டி ஆராச்சி நேற்று முன்தினம் கருத்து வெளியிடுகையில் அரசமைப்பானது ஓர் அடிப்படை சட்ட ஆவணமாகும். அது மக்கள் முன் முதலில் வைக்கப்பட வேண்டும். அவர்கள்தான் அதில் என்ன தீர்மானங்களை எடுக்கவேண்டும் என்பதை முடிவுசெய்ய வேண்டும் - என்றார்.

இது ஒரு முக்கியமான விடயம். ஆனால் ஊடகங்களில் இதுபற்றி சிறிய அளவிலேயே விவாதங்கள் நடைபெற்றுள்ளன. இவைகள் பற்றி அரச ஊடகங்கள் கூட விவாதிப்பதாகத் தெரியவில்லை. மக்களுக்கு என்ன தெரியும் என்றால் 17 ஆவது திருத்தத்தில் மாற்றங்கள் செய்யப்படவிருக்கிறது. ஜனாதிபதியின் பதவிக் காலம் மாற்றப்படபோகிறது என்பவை மட்டும்தான். ஆனால் இடம் பெறப்போகும் கடுமையான மாற்றங்கள் குறித்து அவர்கள் அறியாமல் இருக்கிறார்கள் என்றார் அவர்.

### அவசரம் தேவையில்லை

அரசாங்கம் அரசமைப்பில் மாற்றங்கள் செய்வதற்கான முடிவு எடுப்பதற்கு முன்னர் மூன்று மாத காலமாவது அமர்ந்து ஆராய்ந்திருக்கவேண்டும் என்று கூறிய அவர் மேலும் சொன்னதாவது:-

இந்த முடிவுகளை எடுப்பதற்கு அவசரப்படவேண்டிய அவசியம் இல்லை. ஜனாதிபதியின் பதவிக்காலத்தில் மாற்றம் எதும் செய்வதானால் அதற்கு நிறையவும் கால அவகாசம் இருக்கின்றது. அவசரப்படுவதற்குத் தேவையில்லை.

தேர்தல் ஆணைக்குழு மற்றும் ஏனைய சுதந்திர ஆணைக்குழுக்கள் பற்றியே நாங்கள் பெரிதும் கவலை கொண்டிருக்கிறோம். உத்தேச 18 ஆவது திருத்தத்தின் கீழ் இந்த அமைப்புக்கள் தமது சுதந்திரத்தை இழந்துவிடக்கூடும். தேர்தல் முறையில் மாற்றங்கள் செய்யப்படுவதாய் இருந்தாலும் எந்தவிதமான நன்மை தரும் ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை என்றார் அவர்.

### மக்கள் கருத்துக் கணிப்பு

அதேவேளை, சுதந்திரமும் நியாயமுமான தேர்தலுக்கான அமைப்பின் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் கருத்துத் தெரிவிக்கையில்- 18 ஆவது திருத்தத்துக்கான மூன்றில் இரண்டு பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் பெறுவதற்கு முன்னர் மக்கள் கருத்துக்கணிப்பை அரசாங்கம் நாடவேண்டியது அவசியம் என்றார்.

18ஆவது திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமானால் எதிர்காலத்தில் இடம் பெறும் தேர்தல்கள் எல்லாம் நீதியாகவும் சுதந்திரமாகவும் நடைபெறுவதென்பது துர்லபம். தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார்கள் என்பதால் தேர்தல்களின்போது பொது சேவை அதிகாரிகளால் தேர்தல் திணைக்களத்தினை ஒருங்கிணைத்து கட்டுப்பாட்டுடன் செயற்படுத்துவது முடியாமல் இருக்கும் என்று அவர் மேலும் கூறினார். ஆணைக்குழுவின் சுதந்திரத் தன்மை குறித்து கவலை இருந்து வருகிறது என்றார் அவர். (ப)

## கொழும்பு ரயில் விபத்தில் கொடிகாமம் வாசி மரணம்

கொழும்பில் இடம்பெற்ற ரயில் விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார். கொழும்பு பம்பலப்பிட்டி பகுதியிலேயே இந்த விபத்து இடம் பெற்றதாக அறியவருகிறது.

நேற்று அதிகாலை 3 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. இதில் கொடிகாமத்தைச் சொந்த இடமாகவும் கடந்த ஐந்து வருடங்களாக கொழும்பில் வசித்து வருபவருமாகிய அருணாசலம் சுப்பிரமணியம் (வயது70) என்பவரே உயிரிழந்தார்.

இதுதொடர்பாக பம்பலப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (த)

# 43 பல்கலைக்கழக மாணவர்களுக்கு கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் உதவி

சண்டிலிப்பாய்,செப்.7

ஏழை மாணவர்களினதும், போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களினதும் கல்வி வளர்ச்சிகாகப் பணியாற்றி வரும் கொழும்பு ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன், போரினால் பாதிக்கப்பட்டு கால்களை இழந்து அல்லறபடுபவர்களுக்கு செயற்கை அவயவங்களைப் பெற்றுக் கொடுப்பதிலும் மாணவர்களுக்கு போஷாக்கு உணவு வழங்குவதிலும் ஈடுபட்டு வருகிறது. அதேவேளை, வறுமைக் கோட்டின் கீழுள்ள குடும்பங்களின் வாழ்வாதாரத்தை வளம் பெறச் செய்யும் நோக்குடன் சுய தொழில் முயற்சிக்காக நிதியுதவியையும் வழங்க முன்வந்துள்ளது.

இந்த உதவிகள் இப்போது வழங்கப்பட்டு வருகின்றன.

இதில் போரினால் பாதிக்கப்பட்ட வன்னியைச் சேர்ந்த 43 யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாதம் 1,500 ரூபா வீதம் மூன்று மாதத்திற்கு ஒரு தடவை 4,500 ரூபா வழங்கப்படுகிறது.

பெற்றோரை இழந்த இரு மாணவர்களுக்கு இரு கணனிகள் வழங்கப்பட்டுள்ளன.

தாவடி தமிழ்கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் 110 மாணவர்கள் சுதுமலை கிழக்கு தமிழ்க்கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் 96 மாணவர்கள் ஆகியோருக்கு மதிய போசனம் வழங்கப்பட்டதுடன் கல்வி உபகரணங்களும் வழங்கப்பட்டன. சுதுமலை தமிழ்க்கலவன் பாடசாலைக்கு ஒரு கணனியும் வழங்கப்பட்டது.

தாவடியில் உள்ள ஸ்ரீஇராம கிருஷ்ண மிஷன் சமிதியின் கீழ் இயங்கும் அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்குப் போஷாக்குணவும் கல்வி உபகரணங்களும் வழங்கப்பட்டன.

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு ஆங்கிலப் பாடநெறி ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் நூல் பொதி வழங்கப்பட்டது.

போரினால் அவயவங்களை இழந்த ஆண், பெண் உட்பட 25 பேருக்கு எட்டு லட்சம் ரூபா பெறுமதியான ஜெய்ப்பூர் நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்பட்ட செயற்கை அவயவங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை-

வறுமைக்கோட்டின் கீழுள்ள ஏழைக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை வளம்பெறச் செய்யும் நோக்குடன் சுய தொழில் முயற்சிக்கான கடனும் வழங்கப்படவிருக்கின்றது. இதற்கான பயனாளிகள் விரைவில் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

தாவடியிலுள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் சமிதியில் இடம்பெற்ற நிகழ்வில் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சர்வரூபானந்தா சுவாமிகள் மாணவர்களுக்கான உதவிகளை வழங்கினார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,ஜெய்ப்பூர் நிறுவனத்தின் நிர்வாக உறுப்பினர் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (த-115)

# பல்கலைக்கழகங்களில் அனுமதி கிடைக்காத விஞ்ஞான மாணவர்கள் தாதியராகும் வாய்ப்பு

## எதிர்வரும் ஆண்டுகளில் புதிய திட்டம்

கொழும்பு,செப்.7

ஜி.சீ.ஈ. உயர் தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் சித்தியடைந்த பின்னரும் தேசிய பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படுவதற்கான தகுதி பெறாத மாணவர்களை தாதிய பயிற்சிகளுக்கு ஏற்றுக் கொள்வதென சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன முடிவுசெய்துள்ளார். சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் இத்தகவலைத் வெளியிட்டார்.

உயர் தரவகுப்பில் விஞ்ஞான பிரிவில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்ல முடியாதுள்ள அனைத்து மாணவர்களுக்கும் இந்த வாய்ப்பு வழங்கப்படும்.

இவ்வாறு உள்வாங்கப்படுபவர்களில் 95 வீத தெரிவுகள் பெண்பாலாருக்கும் 5 வீதம் ஆண்பாலாருக்கும் வழங்கப்படும் என்று அப்பேச்சாளர் தெரிவித்தார். அடுத்து வரும் ஆண்டுகளில் இத்திட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்படும் என்றார் அவர்.

இவ்வாறு தாதியர் பயிற்சிக்கென தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு ஆரம்பத்தில் மாதம் ரூ.12500 வீதம் மூன்றாண்டு பயிற்சிக் காலத்தில் வழங்கப்படும். நாடு முழுவதிலும் உள்ள 18தாதிகள் பயிற்சி கல்லூரிகளில் இவர்களுக்கு பயிற்சியளிக்கப்படும். பின்னர் தேவைகளுக்குக்கேற்ற முறையில் தேசிய மருத்துவமனைகளில் அவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படும்.

வருடம்தோறும் 5 ஆயிரம் தாதியர்கள் ஆஸ்பத்திரிகளில் தேவைப்படுகிறார்கள் ஆனால் இப்போது ஒரு முறை உள்வாங்கலில் 3500 பேரே எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள்.

மக்கள்தொகை அதிகரிப்பு, மருத்துவமனைகளின் விஸ்தரிப்பு போன்ற பல்வேறு காரணங்களினால் பயிற்றப்பட்ட தாதிமாரின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. மேலும் வருடம்தோரும் 350 தாதியர்கள் வரை ஓய்வுபெறுகின்றார்கள்.

இப்பொழுது தாதிமார்கள் ஆஸ்பத்திரிகளில் மிகுந்த அழுத்தங்களின் மத்தியில் பணியாற்றுகின்றார்கள். சில சமயங்களில் பல மணிநேரம் மாற்றமின்றி பணியாற்றவேண்டிய நிலைமையும் ஏற்படுகின்றது. தாதியர் விடுமுறையில் செல்லும்போது அவர்களுக்குப் பதிலாகப் பணிபுரிவதற்கு பல மருத்துவமனைகளில் போதிய தாதியர் கடமையில் இல்லாதிருக்கிறார்கள்.

இதுவும் இதுபோன்ற பல பிரச்சினைகளும் இனிவரும் காலத்தில் அறிமுகம் செய்யப்படவிருக்கும் திட்டத்தின் கீழ் தீர்க்கப்பட்டு விடும் என்று அப்பேச்சாளர் தெரிவித்தார்.

மத்திய கிழக்கு, அவுஸ்திரேலியா, கனடா மற்றும் ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் இலங்கையில் தேர்ச்சி பெற்ற தாதிமாருக்கு அதிக கிராக்கி இருக்கின்றது.

ஏற்கனவே தாதிகள் குழுக்கள் சிலவற்றை அமைச்சு இந்த நாடுகளுக்கு அனுப்பியிருப்பதாகவும் தெரியவருகின்றது. (ப)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 23 | 08.09.2010 |
| | புதன்கிழமை |
| திதி: | : அமாவாசை பி.ப.04.39 வரை |
| நட்சத்திரம் | : பூரம் பி.இ.01.46 வரை |
| சுபநேரம் | : 04.34-06.04 வரை |
| ராகுகாலம் | : 12.04-01.34 வரை |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

union assurance
Trust in your tomorrow, today.

# வேலை வாய்ப்பு

**இணையுங்கள் உங்கள் வாழ்க்கையை வெற்றியாக்க (யாழ்.மாவட்ட, வன்னிப்பிரதேசங்களை சேர்ந்தவர்களுக்கான வேலை வாய்ப்பு)**

**இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான யூனியன் அஷ்யூரன்ஸ் யாழ்.மாவட்ட கிளைக்கு பின்வரும் பதவிகளுக்குத் தகுதியானவர்களுக்கு உடனடி நியமனம் வழங்கவுள்ளது.**








## பதவி வெற்றிடங்கள்

- சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி முகாமையாளர் → பதவி - 5
- தனிப்பட்டோர் நிதி முகாமையாளர் → பதவி - 4
- சிரேஷ்டதனிப்பட்டோர் நிதி ஆலோசகர் → பதவி - 3
- தனிப்பட்டோர் நிதி ஆலோசகர் → பதவி - 2
- பதவி - 9 ← சிரேஷ்ட முகவர் அபிவிருத்தி முகாமையாளர்
- பதவி - 8 ← முகவர் அபிவிருத்தி முகாமையாளர்
- பதவி - 7 ← உதவி முகவர் அபிவிருத்தி முகாமையாளர்
- பதவி - 6 ← முகவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்
- பதவி - 1 ↑ காப்புறுதி ஆலோசகர்

**அடிப்படைத் தகைமைகள் :-** கா.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி
காப்புறுதித்துறையில் முன்னனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்
விளையாட்டுத் துறையில் திறமையுள்ளவர்கள்
தற்போதுA/L பரீட்சைக்கு தோற்றியவர்களும் நேர்முகத் தேர்விற்கு தோற்றலாம்
வன்னிப்பிரதேசத்தில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் இளைஞர் யுவதிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்

* உங்களது இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை
* உங்கள் வெற்றியை நோக்கி பணிபுரிவதற்கான ஆர்வம் * திடசித்தம்

**யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்.**

ஏன் தயக்கம் :- தோற்றுங்கள் நேர்முகத் தேர்வுக்கு சுயவிபரக் கோவையுடன்

காலம் :- வியாழக்கிழமை -09-09-2010 நேரம் :- மு.ப 9.00 மணி

இடம் :- யூனியன் அஷ்யூரன்ஸ்,
139, ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு :- விற்பனை முகாமையாளர்
G.சிறீவரதன்
0773422718

(990)

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## சாந்தகுமார் சந்துரு

(யாழ். பல்கலைக்கழக கலைப்பீட4ஆம் வருட சமூகவியல் சிறப்புக்கலை மாணவன்)



அன்னையின் மடியில் 25.07.1986

**நாற்பத்தைந்து நாள்களென்ன ஆண்டுகள் பல சென்றாலும் உனது நினைவுகள் எம்மைவிட்டு அகலாது**
**"நிலையற்ற இவ்வுலகில் எமக்கு நீ நிலையான செல்வமடா"**

பலகோடி செல்வங்கள் எமைத்தேடி வந்தாலும் உன் அன்பிற்கு எவையும் ஈடாகுமா? உன் பிறந்த நன்னாளில் உன் இறப்பை எழுதி- எம்மை கலங்க வைத்ததேனடா? சந்துரு உன் நண்பன் கலிஸ் உடன் இவ்வுலகை விட்டுப்போக உங்களுக்கு எப்படி மனம் வந்ததடா? விதி விபத்து என்ற நாடகத்தை- பிரமன் நடு வழியில் ஏன்தான் நடத்தி முடித்தானடா? படைத்த உயிர்களைக் காப்பாற்றத் தெரியாத பிரமனுக்கு முதலில் காலன்வன் வீசட்டும் பாசக்கயிறு.

கடந்த 25.07.2010 அன்று அகாலமரணமடைந்த எங்கள் அன்புச் செல்வம் சந்துரு அவர்களுடைய மரணச்சடங்கில் பங்கு பற்றியவர்களுக்கும், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டவர்களுக்கும், குறிப்பாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர், பேராசிரியர்கள், அதிபர்கள், மாணவர்கள், நண்பர்கள், அயலவர்கள், உறவினர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட வர்களுக்கும்,மலர்வளையங்கள் சமர்ப்பித்தவர்களுக்கும், ஏனையவழிகளில் உதவி செய்த அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இருவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.**


இறைவன் அடியில் 25.07.2010

186/20, குருநாதர் லேன்,
பருத்தித்துறை றோட்,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

(103016)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எச்.என்.பி.அசூரன்ஸினால் கைதடி நவீல்ட் பாடசாலைக்கு அண்மையில் 25 கட்டில்கள், மெத்தைகள், தலையணைகள் என்பன வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
இந்த நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதனை முதலாவது படத்திலும் எச்.என்.பி.அசூரன்ஸின் சிரேஸ்ட சந்தைப்படுத்தல் அலுவலர் டினுகா, நிர்வாக முகாமையாளர் சான்டோ பெரேரா, வடக்கு கிழக்கு வலய முகாமையாளர் எஸ்.எம்.புவிராஜ், நவீல்ட் பாடசாலை அதிபர் வி.எஸ்.மகேந்திரன், எச்.என்.பி.அசூரன்ஸ் முகாமைத்துவப் பணிப்பாளர் மஞ்சுளா டீ சில்வா, ஆயுள் காப்புறுதி பொது முகாமையாளர் இந்திராணி வீரசிங்க, சந்தைப்படுத்தலுக்கும் விரிவாக்கலுக்குமான பொது முகாமையாளர் லலித் பெனார்ண்டோ ஆகியோர் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும், எச்.என்.பி.அசூரன்ஸ் அதிகாரிகள் மெத்தைகளை நவீல்ட் பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்வதை மூன்றாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: நந்தன்)*

# யாழ்.நகரப் பகுதியில் மட்டும் ரூ. 160 லட்சம் செலுத்தப்படாத மின் கட்டணமாக நிலுவையில்

## எச்சரிக்கைக் கடிதங்களை அனுப்புகிறது மின்சாரசபை

யாழ்ப்பாணம்,செப்.7

யாழ்.நகரப் பகுதியில் மட்டும் சுமார் 160 லட்சம் ரூபா செலுத்தப்படாத மின் கட்டணமாக நிலுவையில் உள்ளதாக மின்சார சபை வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

இந்த நிலையை அடுத்து அவ்வாறு செலுத்தத் தவறியுள்ளோருக்கு எச்சரிக்கைக் கடிதம் அனுப்பும் நடவடிக்கைகளை மின்சார சபை ஆரம்பித்துள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இது தொடர்பாக அவை மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சிலர் மாதாந்த மின் கட்டணங்களை உரிய வேளையில் செலுத்துவதற்குத் தவறிவிடுகின்றனர். இந்த நிலுவைகள் மாதாந்தம் அதிகரித்துச் செல்கின்றன.

இந்த நிலுவைகளை உடனடியாக அறவிடுவதற்கு மின்சாரசபை தற்போது துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது-என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை-

மின் கட்டண நிலுவைகளைச் செலுத்தாதவர்களுக்கு மின் விநியோகத்தைத் துண்டிக்கும் எச்சரிக்கை கடிதங்களை நேற்றுத் தொடக்கம் விநியோகிக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கமைய மின்சாரக் கட்டண நிலுவையைச் செலுத்தத் தவறியதற்கான குற்றப்பணம், அத்துடன் நிலுவைக்கான வட்டி என்பனவும் சேர்த்து அறவிடப்படவுள்ளது.

இந்த அறிவித்தலை அடுத்து நேற்று யாழ். நகரில் கே.கே.எஸ்.வீதியில் அமைந்துள்ள மின்சாரசபை அலுவலகத்தில் மின் பாவனையாளர்கள் முண்டியடித்துக் கொண்டு மின் கட்டணங்களைச் செலுத்தியதைக்காண முடிந்தது. (த-26)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,செப்.7

நல்லைக்கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவையொட்டி இளங்கலைஞர் மன்றமும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானமும் இணைந்து துர்க்கா மணிமண்டபத்தில் நடத்தும் இசையரங்கில் இன்று மாலை 6.30 மணிக்கு ஏ.கே.கருணாகரனின் பாட்டு இடம்பெறும்.

கே.குகபரன் வயலினும் செல்வன் கே.கஜன் மிருதங்கமும் செல்வன் என். மாதவன் கடமும் எஸ்.செந்தூரன் முகர்சிங்கும் வாசிப்பர். (201)

* * *

நல்லைக்கந்தன் ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் சமயச் சொற்பொழிவுகள் வரிசையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு 'தேரின் மகத்துவம்' என்னும் தலைப்பில் சைவப்புலவர் கு.சுமுகலிங்கத்தின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

அளவெட்டி விநாயகர் அறநெறிப்பாடசாலை, மல்லாகம் நீலியம்பனை அறநெறிப்பாடசாலை, சங்கரத்தை முருகமூர்த்தி அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும். (201)

* * *

நல்லைக் கந்தன் ஆலய உற்சவத்தையொட்டி நல்லூர் சைவமகாசபை நல்லூர் திருஞானசம்பந்த குருமூர்த்தி ஆலய மண்டபத்தில் நடத்தும் தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு கதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தசர்மா 'வீர அபிமன்யு' என்னும் தலைப்பில் உரையாற்றுவார். (201)

# உக்கக் கூடிய திண்மக் கழிவுகளை மரங்களுக்குப் பசளையாகப் புதையுங்கள்

## பிரதேச சபைச் செயலாளர் அறிவுரை

சண்டிலிப்பாய்,செப்.7

நுளம்புகள் உற்பத்தியாகக்கூடிய வகையில் மழைநீர் தேங்கி நிற்கக்கூடிய உக்காமல் இருக்கக் கூடிய பொருள்களை மட்டும் வீதிகளின் குறிப்பிட்ட இடங்களில் வைக்குமாறு தெரிவித்துள்ள வலி. தென்மேற்கு பிரதேச சபைச் செயலாளர், உக்கக் கூடிய திண்மக்கழிவுகளை வீதிகளில் போடாமல் மரங்களுக்குப் பசளையாக வீடுகளில் வெட்டிப் புதைக்குமாறு அறிவுரை கூறியுள்ளார்.

டெங்கு நோய்ப் பரம்பலையும் நுளம்பு உற்பத்தியையும் தடுப்பதற்காக வீடுகளில் தேங்கிக் கிடக்கும் மழைநீர் தேங்கி நிற்கக்கூடிய திண்மக்கழிவுகளை வலி. தென் மேற்குப் பிரதேசசபை வாகனங்கள் மூலம் ஏற்றி அப்புறப்படுத்துவதில் தற்பொழுது ஈடுபட்டுள்ளது. ஆனால் பெரும்பாலான மக்கள் வீடுகளிலுள்ள உக்கக்கூடிய திண்மக் கழிவுகளையும் வீதிகளில் போட்டு வருகின்றார்கள். இதனால் வீதிகள் அசுத்தமடைவதுடன் இவற்றை ஏற்றிச் செல்வதற்கு பிரதேச சபைக்குப் பாரிய பணச் செலவும் ஏற்படுகின்றது.

எனவே பிரதேச சபையின் நலன்கருதி மழைநீர் தேங்கி நிற்கக்கூடிய பொருள்களை மட்டும் வீதியில் போடும்படியும் உக்கக்கூடிய ஏனைய திண்மக்கழிவுகளை மரங்களுக்குப் பசளையாக வீடுகளில் வெட்டிப் புதைக்கும்படி பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை-

வலி.தென்மேற்குப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற வாராந்த சுகாதாரக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய வீதிகளில் குப்பைகளைப் போடுபவர்கள் மீது பொலிஸாரின் உதவியுடன் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. (த-115)

யாழ்ப்பாணச் செய்திகள்

# யாழ்.ஆஸ்பத்திரியில் 'எக்ஸ்றே' படப்பிடிப்பு மட்டுப்படுத்திய அளவில்

## இரண்டு இயந்திரங்கள் பழுதடைந்தன

யாழ்ப்பாணம்,செப்.7

யாழ்.போதனா வைத்தியசாலையில் 'எக்ஸ்றே' படப்பிடிப்புப் பணிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நடைபெற்று வருகின்றன.

வைத்தியசாலையில் 'எக்ஸ்றே' படப்பிடிப்பு இயந்திரங்கள் இரண்டு பழுதடைந்துள்ளதாலேயே படப்பிடிப்புப் பணிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது ஒரு 'எக்ஸ்றே' இயந்திரம் மூலமே படப்பிடிப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த ஒரு 'எக்ஸ்றே' கருவிமூலம் அவசர நோயாளர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் படப்பிடிப்பு நடைபெற்று வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னரும் 'எக்ஸ்றே' இயந்திரம் ஒன்று பழுதடைந்ததால் படப்பிடிப்புப் பணிகள் பாதிக்கப்பட்டன எனினும் கொழும்பில் இருந்து வந்த தொழில்நுட்பவியலாளர்கள் உடனடியாக அதனைத் திருத்திச் செயற்பட வைத்தனர்.

இப்போது இரண்டு 'எக்ஸ்றே' இயந்திரங்கள் பழுதடைந்துள்ளதால் படப்பிடிப்புப் பணிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

பழுதடைந்த இரண்டு 'எக்ஸ்றே' இயந்திரங்களையும் உடனடியாகத் திருத்திச் செயற்பட வைப்பதற்கான ஏற்பாடுகளை வைத்தியசாலை நிர்வாகம் மேற்கொண்டுள்ளது. (த-26)

# நிறுத்தல், அளத்தல் கருவிகளுக்கு முத்திரையிடல்

யாழ்ப்பாணம்,செப்.7

சுன்னாகத்தின் சகல வியாபார நிலையங்களிலும் நிறுத்தல், அளத்தல் கருவிகள் பரிசோதனை செய்யப்பட்டு முத்திரை இடப்படவுள்ளது என வலி.தெற்கு பிரதேச சபையின் நிறுத்தல், அளவைப் பகுதிப் பொறுப்பதிகாரி எஸ்.கிருஷ்ணதாசன் தெரிவித்துள்ளார்.

இந்தப் பரிசோதனைகள் இன்று செவ்வாய்க்கிழமையும் எதிர்வரும் 9ஆம், 13ஆம் திகதிகளில் காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 1மணி வரை இடம்பெறவுள்ளது. (த-6-310-317)

# விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் கூட்டெரு தயாரிக்கும் செயற்பாடு

யாழ்ப்பாணம்,செப்.7

திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தினால் விவசாயத்திற்கான கூட்டெரு தயாரிக்கப்பட்டு வருவதாக திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி திருமதி செ.விஜயரட்ணம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில்:-

அண்மைக் காலமாக விவசாயிகள் அதிகளவான உரத்தை பயன்படுத்துவதனால் நிலத்தடி நீர்வளம் பாதிக்கப்படுகிறது. அத்தோடு புற்றுநோய், மலட்டுத்தன்மை, மூளை வளர்ச்சி குன்றியபிள்ளை பிறத்தல் போன்ற நோய்களும் ஏற்படுகின்றன.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சில வழிகள் கையாளப்படுகின்றன. அதில் ஒரு முறையாக இந்தக் கூட்டெரு தயாரிக்கப்பட்டு வருகிறது.

வீட்டில் காணப்படும் குப்பைகளைக் தேக்கி வைக்காமல் அந்தக் குப்பைகளில் இருந்து சுலபமான முறையில் கூட்டெரு தயாரிக்கலாம் எனவும் கூட்டெரு தயாரிக்கும் முறை தெரியாதவர்களுக்கு திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையம் அதனைச் செய்து காட்டுவதுடன் செய்முறை விளக்கம், அதன் பயன் என்பன பற்றியும் விளக்கமளிப்பதாகவும் பொறுப்பதிகாரி மேலும் கூறினார். (த-314-328)

# குழாய் மூலம் குடிதண்ணீர் பெறுவதற்கு காத்திருக்கும் கட்டுடை, நவாலி மக்கள்

சண்டிலிப்பாய்,செப்.7

வீதியைக் குறுக்கே வெட்டி குழாய் மூலம் குடிதண்ணீரைப் பெறுவதற்கு வீதி அபிவிருத்தித் திணைக்களம் அனுமதி வழங்காததினால் தேசிய நீர்வழங்கல் சபையினால் வழங்கப்படும் குழாய் மூலமான குடிதண்ணீரைப் பெறமுடியாமல் கட்டுடை, நவாலிப் பகுதி மக்கள் திண்டாடுகிறார்கள. வீதியைக் குறுக்கே வெட்டுவதினால் வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்குப் பாரிய நட்டம் ஏற்படுவதே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பல வருடங்களாக வீடு வீடாகவும் வயல் வெளிகளிலும் ஆலயங்களைத் தேடியும் அலைந்து திரிந்த கட்டுடை, நவாலி மக்களுக்குத் தேசிய நீர் வழங்கல் சபை அப்பகுதியில் உள்ள வீதிகளில் குறிப்பிட்ட இடங்களில் தொட்டிகளை அமைத்து சுன்னாகத்திலிருந்து கந்தரோடை ஊடாகக் குழாய் மூலம் குடிதண்ணீரை வழங்கி வருகின்றது. இதனால் நூற்றுக் கணக்கான குடும்பங்கள் நன்மையடைந்துள்ளார்கள்.

நீர்வழங்கல் சபையினால் குழாய்மூலம் வழங்கப்பட்டுவரும் குடிதண்ணீரை இப்பகுதியில் வசிக்கும் வசதியுள்ள குடும்பங்கள் தங்கள் வீடுகளுக்கும் குழாய்மூலம் குடிதண்ணீரை வழங்குமாறு மேற்படி சபையிடம் விண்ணப்பித்துள்ளார்கள்.

ஆனால் இவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற நீர் வழங்கல் சபை தயாராக உள்ளது. எனினும் சம்பந்தப்பட்டவர்களுக்குக் குழாய் மூலமாக நீர் வழங்குவதற்கு வீதியைக் குறுக்கே வெட்ட வீதி அபிவிருத்தித் திணைக்களம் அனுமதி மறுத்துள்ளது. இதனால் விண்ணப்பித்த பலருக்கு நீர் வழங்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. திணைக்களத்தின் அனுமதியை எதிர்பார்த்து பல குடும்பங்கள் காத்திருக்கின்றன. (த-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நல்லூர் கந்தசுவாமி கோயிலில்..

## இன்று தேர்த் திருவிழா [24 ஆம் திருவிழா]

முருகனே! நல்லை முதல்வனே!
தேரேறி வாரீர் தெய்வமே எமைக்காரீர்

விழா சிறப்புற வாழ்த்துவோர்:



**திருமுருகன் கொம்நெற்**

259, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tell : 021 222 7835

46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(பலநோக்கு கூ.ச. முன்பாக)
Tell : 021 222 7560

**TCN EXPRESS,**
**2 B, NELSAN PLACE,**
**COLOMBO - 6**

பிரதான வீதி, நெல்லியடி.
திருநகர் வீதி, கிளிநொச்சி.
44 மில் றோட், வவுனியா.




## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்

## வழிபடுநர் சபையின் பொதுக் கூட்டம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வழிபடுநர் சபையின் பொதுக் கூட்டம் 19.12. 2010 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கா. ஆ.தியாகராசா அவர்கள் தலைமையில் நடைபெறும்.

இறுதியாக நடைபெற்ற சபையின் பொதுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு உரிய முறையில் அறிவித்தல் வழங்கப்படும்.

அன்றைய தினம் புதிய அறங்காவலர்களுக்கான தெரிவுகள் இடம்பெறும் என்பதையும் வேட்பாளர் ஒருவர் ஆலய முகாமைத் திட்டத்தின் 5 ஆவது தேவைப்பாடுகளை நிறைவு செய்திருக்க வேண்டும் என்பதையும் உறுப்பினர்களுக்கு அறியத் தருகின்றோம்.

மேலும் விபரங்களுக்கு 01.10.2010 இன் பின்னர் ஆலய அறிவித்தல் பலகையில் தகவல்களை அறிந்துகொள்ள முடியும்.

செயலாளர்,
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி
அம்மன் கோயில்-நயினாதீவு.

(103003)

## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ-து)

### கேள்வி கோரல்கள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை பின்வரும் பொருள்களுக்கான கேள்வி கோரல்களைக் கோருகின்றது.

1. ஈயம் 3100 கிலோகிராம்
2. இரும்பு (பழைய அச்சக இயந்திரமும், உதிரிப் பாகங்களும்)
3. பழுதடைந்த மரத் தளபாடங்கள்

கேள்விப் பத்திரத்துக்கான மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 50 செலுத்தி இவற்றுக்கான விவரங்களையும் விண்ணப்பப்படிவத்தையும் சபை அலுவலக நேரத்தில் பெற்று 14.09.2010 இற்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

செயலாளர்,
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை,
வீரசிங்கம் கட்டடத் தொகுதி 2ஆம் மாடி,
இல.12, கே.கே.எஸ். வீதி.

(சி/570718)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் பொன்னம்பலம் சிவலிங்கம்



திதி: சதுர்த்தசி 07.09.2010

தோற்றம்
28.09.1931

மறைவு
19.08.2009

அன்பின் பிறப்பிடமாய்
அறிவின் இருப்பிடமாய்
பண்பின் பொக்கிசமாய்
இடர்தீர்க்கும் மருந்தாய்
எம் இதயத்தில் வாழ்ந்த எம்
அன்புத் தெய்வமே
ஆண்டு ஒன்று போனாலும்
உம் நினைவுகள் என்றும் எம்
மனதைவிட்டுப் பிரியாது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன்

'மணிமகால்'
துன்னாலை கிழக்கு, கரவெட்டி. (102875) மனைவி.

## தொழில்சார் உபகரணங்கள் வழங்குவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப். 07

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நீர்வேலி வடக்கு, புத்தூர் கிழக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் மீளக்குடியேறிய மக்களில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் 60 பேருக்கு 50 ஆயிரம் ரூபா வரை பெறுமதியான தொழிர்சார் உபகரணங்கள் ஜி.ரி.இசற் நிறுவன அனுசரணையுடன் நீர்வேலி வடக்கு, புத்தூர் கிழக்கு பகுதியில் உள்ள சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் இ.கிருஷ்ணராசன் தெரிவித்துள்ளார். (த-72)

## கிளிநொச்சி வைத்தியசாலையில் மார்பு நோய் சிகிச்சைகள்

மார்பு நோய்களுக்கான சிகிச்சைகள் கிளிநொச்சி வைத்தியசாலையில் நாளை மறுதினம் புதன்கிழமையில் இருந்து ஆரம்பமாகவுள்ளது. இத்தகவலை டாக்டர் ஜமுனானந்தா தெரிவித்தார்.

இது குறித்து மேலும் தெரிவிக்கை யில் விடுமுறை நாள்கள் தவிர்ந்த ஒவ்வொரு புதன்கிழமையும் காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 12.30 மணி வரை கிளிநொச்சி வைத்தியசாலையில் மார்புநோய் தொடர்பான சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளது. இதனால் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள காச நோயாளர்கள் இத்தினங்களில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு வந்து சேவையைப் பெற்றுக்கொள்ளலாம் -என்றார். (எ-315)

## கும்பாபிஷேகம்

நீர்வேலி தெற்கு முருகையன் ஆலயத்தின் கும்பாபிஷேகம் எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்திற்கான பூர்வாங்கக் கிரியைகள் எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பமாகும்.

12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கு யாகப்பூசை ஆரம்பமாகி தொடர்ந்து 8 மணிக்கு கும்பாபிஷேகம் நடைபெறும். (204-26)

## ஓய்வூதிய அங்கத்துவ அடையாள அட்டை

காரைநகர், செப் 07

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு எல்லைக்குட்பட்ட அரச ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தில் 2009 ஆம் ஆண்டு இணைந்துகொண்ட-இதுவரை அங்கத்துவ அட்டையைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் தன்னுடன் தொடர்பு கொண்டு அங்கத்துவ அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு நிலையத்தின் செயலாளர் அ.கமலாகரன் கேட்டுள்ளார்.

அத்துடன் அங்கத்தவர்களுக்கு ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தில் இருந்து கடன் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதால் கடன்பெற விரும்புவோர் உரிய படிவங்களைப் பெற்றுப் பூரணப்படுத்தி சமர்ப்பிக்குமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். (எ-250)


## காணி விற்பனை

கொக்குவிலில் கே.கே.எஸ் வீதியில் இருந்து 400 மீற்றர் தூரத்தில் 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0789113645

## கடை வாடகைக்கு

கே.கே.எஸ்.வீதியில், கொக்குவில் சந்தியில் 15 அடி அகலமும் 50 அடி நீளமும் உடைய கடையொன்று வாடகைக்குண்டு. களஞ்சியசாலையாகவும் பாவிக்கலாம்.

தொடர்பு: 0212225101

## வீடு, கடை வாடகைக்குண்டு

கஸ்தூரியார் வீதியில் வீடும் கடையும், நாவலர் வீதியிலும் வீடும் கடையும் வாடகைக்குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 021 222 3479
021 567 0313

## சயன்ஸ் சென்ரர்

நெல்லியடி, கரவெட்டி
புதிய பிரிவு ஆரம்பம்

குறுகிய காலத்தில் இலகுவான முறையில்
எழுத, வாசிக்க, பேச

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**

Lectures by: **Mr.K.Nishanthan**
(Dip.In.Eng)

ஆரம்பம்: 08.09.2010 புதன்கிழமை
பிரிவு I : at 7.30 a.m (திங்,புதன்)



## எப்போதாவது இப்படி உணர்ந்துள்ளீர்களா?



### வேலை தேடுவோர்க்கான இலவச கருத்தரங்கு

வேலை தேடும் ,வாழ்வின் அடுத்த படிக்கு செல்ல விரும்பும் இளைஞர்/யுவதி நீங்களாயின் உங்களுக்கு வேலைவாய்ப்பை மற்றும் நவீன உலகில் வாழும் திறனை அதிகரிக்கும் அவசியமான கருத்தரங்கு இது. பல நேர்முகத்தேர்வுகளில் நீங்கள் வாய்ப்பை இழந்திருக்கலாம்.,இங்கிருந்தே சிங்கப்பூர் போன்ற நாடுகளில் வேலை பெறலாம் என்பதை அறியாதிருக்கலாம், தனியார் நிறுவனங்கள் உங்களிடம் எதனை எதிர்பாற்கின்றன என்பதை அறியாதிருக்கலாம் சந்தேகங்களுக்கு 19/09/2010 காலை 9.30க்கு இக்கருத்தரங்கில் விடை கிடைக்கும் முன்பதிவு செய்தோர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

021-3208342
0777-302882

After O/L,A/L,Degree
>>> KU

#75,Temple Road,
Jaffna(லாவா வைத்தியசாலை மேல்மாடி).

விபரங்களுக்கும்,கருத்தரங்கில் கலந்துகொள்ள பெயர்களை பதிவு செய்யவும் நேரில் வரவும்.

முன்பதிவு இறுதி : 17/09/2010 9.30 AM

நொலிட்ஜ் யூனிவேர்ஸ்
KNOWLEDGE UNIVERSE®
Malaysian College of Business and ICT
Soft Skills Development Centre

இலங்கை மற்றும் சர்வதேச நிறுவனங்கள் உங்களிடம் எதிர்பார்ப்பது எதை?
விசேடமாக யாழ் இளைஞர்களுக்கு அறிவூட்டும் நிகழ்வு இது


## 31ஆம் நாள் நினைவு நெகிழ்தலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
### வடிவேலு அன்னலட்சுமி

தோற்றம் 04.04.1935
மறைவு 08.08.2010

பன்னிரண்டு கண்கள் உலகைக்
காணும்
பௌவியம்-உனது சொந்தம்
பன்னிரு கால்கள் உலகில் வரும்
உன்னதம் உண்மை -நீ...
பின்வரும் சேதியை
உன் வழி உணர்த்தும்
புவி உனைத் தாங்கவில்லையே!

எங்கள் அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (07.09.2010) செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு நயினாதீவு கங்காதரணி தீர்த்தக் கரையில் நடைபெறும். மு.ப. 11 மணிக்கு எமது இல்லத்தில் வீட்டுக்கிருத்திய நிகழ்வும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நடைபெறவுள்ளன. மேற்படி நிகழ்வுகளில் பங்குபற்றிக் கொள்ளுமாறும் தொடர்ந்தும் நடைபெறவுள்ள மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (103004) குடும்பத்தினர்.

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் வேலுப்பிள்ளை மகாலிங்கம்



திதி: சதுர்த்தசி

தோற்றம்
30.06.1928

மறைவு
02.09.2005

எம் இனிய தந்தையே!
வேதனையில் நாம் தவிக்க
மண்ணுலகை
விட்டுப்போய்
ஆண்டுகள் ஐந்து ஆன
போதும்
ஆறவில்லை எம் துயரம்.
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
பிரார்த்திக்கின்றோம்.

இணுவில் கிழக்கு. (102989) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### எலியாஸ் அருளானந்தம் (ஜெயரெட்ணம்)



குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எலியாஸ் அருளானந்தம் (ஜெயரெட்ணம்) 30.08.2010 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான எலியாஸ்-விக்ரோறியா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்வம்- யோசேப்பினா தம்பதியரின் அன்பு மருமகனும் பத்திமாவின் பாசமிகு கணவரும் பபிதா (பிரான்ஸ்), நெவின் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வெஞ்சப் (பிரான்ஸ்), றமணிக்கா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் டெனிசியஸ் (பிரான்ஸ்), ஸ்ரெபான் (பிரான்ஸ்), ஜெவின்ஸன் (பிரான்ஸ்), நேந்திரா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் அவரின் இல்லத்தில் நாளை (08.09.2010) புதன்கிழமை பி.ப. 3 மணியளவில் நடைபெற்று மரியன்னை தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

18/1, மத்திய கிழக்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினரும், சகோதரர்களும், மைத்துனர்மார்களும், பெறாமக்களும், மருமக்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கையின் அரச அதிபர்கள் மாநாடு யாழ். மாவட்ட செயலகத்தில் அரச அதிபரின் மாநாட்டு அறையில் நேற்று இடம் பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் பங்குபற்ற வருகை தந்த பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன, பிரதி அமைச்சர் டிலான் பெரேரா, அமைச்சின் செயலாளர் ஆகியோரை யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அழைத்து வருவதை முதல் படத்திலும் அமைச்சர் ஜோன் செனவிரத்தன உரையாற்றுவதனை இரண்டாம் படத்திலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்ட அரச அதிபர்கள் அமர்ந்திருப்பதனை மூன்றாம் படத்திலும் நாட்டின் சகல மாவட்ட அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள் மாநாட்டில் பங்கேற்றிருப்பதை இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள்: உமா,கவிநேசன்)

# காணி உறுதிகளின் இணைப்பிரதிகளை சமர்ப்பிக்காத நொத்தாரிசுமாருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

## யாழ்.வந்த பதிவாளர் நாயகம் பணிப்புரை

யாழ்ப்பாணம்,செப்.7

காணி உறுதிகளின் இணைப்பிரதிகளை சமர்ப்பிக்கத் தவறும் நொத்தாரிசுமாருக்கு எதிராகக் கட்டளைச் சட்டத்தின்படி நீதிமன்றின் மூலம் நடவடிக்கை எடுக்கவும், உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத இணைப்பிரதிகளுக்கு தண்டப் பணம் அறவிடுமாறும் பதிவாளர் நாயகம் ஈ.எம்.குணசேகர உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாண காணிப் பதிவகத்துக்கு உதவிப் பதிவாளர் நாயகம் சதாசிவ ஐயர், கிழக்கு வலய உதவிப் பதிவாளர் எம்.என்.நயீம், தலைமை அலுவலக உதவிப் பதிவாளர் நாயகத்துடன் விஜயம் செய்திருந்தார்.

அலுவலக நிர்வாகம் சிறப்பாக இயங்குவதைப் பாராட்டிய பதிவாளர் நாயகம் தற்போது சிவில் நிர்வாகம் வழமைக்குத் திரும்பியுள்ளதால் ஆவணக்கட்டளைச் சட்டம், நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின்படி சகல நடவடிக்கைகளையும் உடனடியாக ஆரம்பிக்குமாறு காணிப் பதிவாளருக்குப் பணிப்புரை விடுத்தார்.

பல நொத்தாரிசுமார் உறுதிகளின் இணைப் பிரதிகளை உரிய காலத்தினுள் சமர்ப்பிக்காததை அவதானித்த அவர் தாமதமாக உறுதிகளின் இணைப்பிரதிகளை சமர்ப்பிப்பவர்களிடம் தண்டப் பணம் அறவிடுமாறும் இணைப்பிரதிகளை சமர்ப்பிக்கத் தவறுபவர்களுக்கு கட்டளைச் சட்டத்தின்படி நீதிமன்றின் மூலம் நடவடிக்கை எடுக்குமாறும் பணிப்பு விடுத்துள்ளார்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-6)

## பதவியேற்றார் விக்னேஸ்வரன்

வடமாகாணக் கல்விப் பணிப்பாளராக ப.விக்னேஸ்வரன் நேற்று திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாகப் பதவியேற்றார்.

கடந்த ஆறு வருடங்கள் வலிகாம வலயக் கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றிய இவர் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறியின் பணிப்பின் பேரில் கடந்த மாதம் முதலாம் திகதி முதல் வடமாகாணக் கல்விப்பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

இவர் நேற்று திங்கட்கிழமை திருகோணமலையில் உள்ள வடமாகாண ஆளுநரின் தலைமை அலுவலகத்தில் உத்தியோகபூர்வமாக பதவியேற்றார். (த-9)

# வாழ்வகம் நிறுவனத்தின் நிறுவுநர்தினம் சுன்னாகத்தில் செப்.11 இல் அனுஷ்டிப்பு

சண்டிலிப்பாய்,செப்.7

விழிவலுவற்றோருக்காகச் செயற்படும் வாழ்வகம் நிறுவனத்தின் நிறுவுநர் நினைவு தினம் எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை சுன்னாகம் சபாபதி வீதியில் அமைந்துள்ள வாழ்வக நிலையத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

வாழ்வகத்தின் தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர் எஸ்.வி.அரசகுமார், சட்டத்தரணி செல்வி ஞான லோஜினி சிவஞானம், வர்த்தகப் பிரமுகர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம், தொழிலதிபர் எஸ்.பி.நடராசா ஆகியோரும் -

கௌரவ விருந்தினர்களாக தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி திருத்தணிகை நவரட்ணம் ஆகியோரும் கலந்துகொள்வார்.

நிகழ்வில் பேராதனைப் பல்கலைக் கழக பேராசிரியர் டி.பி.எம்.வீரக்கொடி நினைவுப் பேருரையை நிகழ்த்துவார். வாழ்வக மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இதன் போது இடம்பெறவுள்ளது. (எ-115)

### நல்லூர் திருவிழா, விடைத்தாள் திருத்தம் காரணமாக

# குடாநாட்டில் வெவ்வேறு திகதிகளில் பாடசாலைகள் இம்முறை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.7

யாழ்.குடாநாட்டில் பரீட்சை வினாத்தாள்கள் திருத்தும் பணிகள் நடைபெறும் நான்கு பாடசாலைகள் மற்றும் நல்லூர் ஆலயப் பெரும் திருவிழாவை முன்னிட்டு விடுமுறை வழங்கப்படும் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் 3 ஆம் தவணைக் கற்றல் நடவடிக்கைகளுக்காக இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப் படவுள்ளதாக யாழ்.கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை வினாத்தாள்கள் திருத்தும் பாடசாலைகளான யாழ். மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை, யாழ். இந்து மகளிர் கல்லூரி மற்றும் தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்கள் திருத்தும் பணிகள் நடைபெறும் நெல்லியடி மத்திய கல்லூரி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளும் பின்னர் ஆரம்பமாகவுள்ள அதேவேளை - நல்லூர் ஆலயப் பெருந்திருவிழாவிற்கு விடுமுறை வழங்குவதற்கு விண்ணப்பித்து அனுமதிபெற்ற பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய சகல பாடசாலைகளும் இன்று ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-16)




# தாராக்குளம் தொடர்மாடிக் குடியிருப்பில் வேறுயாரும் குடியமர்த்தப்பட மாட்டார்கள்

## வீடமைப்பு அதிகார சபை மாவட்ட முகாமையாளர் விளக்கம்

யாழ்ப்பாணம்,செப்.7

தாராக்குளம் வீட்டுத்திட்டத்திலுள்ள குடியிருப்பாளர்களை நாவற்குழிக்கு இடம்மாற்றிவிட்டு அங்கு வேறுயாரையும் குடியோற்றுவதற்கான திட்டம் எதுவும் திரைமறைவில் மேற்கொள்ளப்படவில்லை என தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மாவட்ட முகாமையாளர் ஜே.மாசிலாமணி தெரிவித்துள்ளார்.

கடந்த 3 ஆம் திகதி உதயனில் தாராக்குளம், தொடர்மாடிக் குடியிருப்புத் தொடர்பாக வெளியான செய்தி குறித்து அனுப்பிவைத்துள்ள விளக்கத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவரது விளக்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கடந்த ஒரு மாதத்திற்கு முன் தலைமையலுவலகத்திலிருந்து வருகை தந்த தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் உட்பட உயர் அதிகாரிகள் குழு ஒன்று குருநகர் மாடிக் குடியிருப்பையும், தாராக்குளம் மாடிக்குடியிருப்பையும் பார்வையிட்டது. தாராக்குளம் மாடிக்குடியிருப்பை பார்வையிடச் சென்றபோது, அங்கு 5 குடும்பங்கள் அளவில் எந்தவித வசதிகளுமற்ற நிலையில் குடியிருந்ததை காணக்கூடியதாக இருந்தது. அவர்களால் இத் தொடர்மாடியைத் திருத்தித்தருமாறு கோரிக்கை விடப்பட்டது. இதற்கமைய தலைமையலுவலகத்தினால் பொறியியலாளர் குழுவொன்று இங்கு அனுப்பப்பட்டு சேதமதிப்பீட்டறிக்கைகள் தயாரிக்கப்பட்டபோது, தாராக்குளம் மாடிக்குடியிருப்பை திருத்துவதற்கு ரூபா 25 மில்லியன் தேவைப்படுமென அறியப்பட்டது. ரூபா 25 மில்லியன் செலவு செய்து தமக்கென சொந்தமாக காணியற்ற தொடர் மாடியில் உள்ள வீடுகளை திருத்துவதை விட சகல வசதிகளுடனும் கூடிய சொந்த காணியில் தனிவீட்டை அத்தொடர்மாடியில் குடியிருக்கும் ஒவ்வொரு பயனாளிகளுக்கும் பெற்றுக்கொடுப்பது சிறந்தது என எம்மால் ஆலோசனைக்கு எடுக்கப்பட்டு அவர்களது விருப்பத்தை அறிவதற்கான முன்மொழிவு கடிதம் ஒன்றே 31.08.2010 திகதியன்று யாழ்.மாவட்டத்திற்கு வருகைதந்த நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்சவினால் வழங்கப்பட்டது. அக்கடிதத்தில் தாராக்குளம் வீட்டுத்திட்டத்திலுள்ள பயனாளிகளுக்கான ஒதுக்கீடுகள் ரத்து செய்யப்பட்டதாகக் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

வீடமைப்பு அமைச்சர் தாராக்குளம் குடியிருப்புக்குச் சென்றபோது அங்கு குடியிருக்கும் குடியிருப்பாளர்களின் அபிப்பிராயங்களைக் கேட்டறிந்ததுடன் இவ் வீட்டுத்தி[illegible] நடவடிக்கை எ[illegible] கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களுடன் ஆலோசனை நடத்தி சம்பந்தப்பட்ட குடியிருப்பாளர்களின் பூரண விருப்பத்துடனே எடுக்கப்படும் என உறுதி கூறினார். குடியிருப்பாளர்களைப் பயமுறுத்தும் தொனியிலோ அல்லது எச்சரிக்கை விடும் தொனியிலோ எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை என்பதுடன் அவ்வீட்டுத்திட்டத்திலுள்ள பயனாளிகளை நாவற்குழிக்கு இடம்மாற்றி இதில் வேறுயாரையும் குடியிருத்துவதற்கான திட்டம் எதுவும் திரைமறைவில் மேற்கொள்ளப்படவில்லை.

இதேபோல வீடமைப்பு அமைச்சர் குருநகர் தொடர்மாடி வீடமைப்புத் திட்டத்தைப் பார்வையிடச் சென்றபோது அவ்வீட்டுத்திட்டத்திலுள்ள குடியிருப்பாளர்களில் ஒருவர் தான் குடியிருக்கும் தொடர்மாடியிலுள்ள அசௌகரியங்களை அமைச்சருக்குத் தெரிவித்தபோது, காணியுடன் அமைந்த தனிவீடு அமைத்துத் தந்தால் அங்கு சென்று வசிக்க விரும்புவீர்களா? என்று மாத்திரமே அமைச்சரால் அக்குடியிருப்பாளரிடம் கேட்கப்பட்டதே அன்றி எச்சந்தர்ப்பத்திலும் அவ்வீட்டுத்திட்டத்திலுள்ள எந்தக் குடியிருப்பாளரையும் நாவற்குழிக்குச் [illegible] அமைச்சரினால் [illegible] விடுக்கப்படவில்லை - என்றுள்ளது. (த)

# ரம்ழான் சிந்தனை!

லைலத்துல் கத்ர் இரவு (2010.09.07)

அல்லாஹ்வின் அருளை அகிலத்து மாந்தர்க்கு அளவின்றிப்பெற வாய்ப்பளிக்கும் ரம்ழான் மாதத்தில் பாவச் சுமையைப் போக்கி பக்குவப் பண்பாட்டைப் புடம் போட்டுப் புனிதமாக்கித் தந்திட வந்த 'லைலத்துல் கத்ர்' இரவு ஆயிரம் ஆண்டுகளைவிடவும் விசேடமானது'. புனிதமானது, மனிதன் நரகத் துன்பத்திலிருந்தும் விடுதலை பெற்று 'றைப்பான்' எனும் தவினத்து மாளிகையின் சொந்தக்காரனாகும் சந்தர்ப்பத்தை வழங்குவதே இம் மாதமாகும். கத்ர் எனும் அல்லாஹ்வின் அற்புதக் கொடுப்பனவையடைவதற்காகவே ரம்ழானின் பிந்தைய இரவு வேளை களில் தேடித் துருவுவதில் தம்மை அர்ப்பணிக்கும் ஈமானிய இதயங்களில் ரீங்கார மிசைக்கும் தேனீக்கள் போன்று இரவு வேளைகளில் இபாதத் எனும் விளக்க வழிபாடுகளில் வரிந்து நின்று அழைப்பதிலும் அல்லாவிடம் இதையத்தை இறக்கிவைத்து சிந்தனையை முடுக்கி விட்டுப் பிரார்த்திப்பதிலும் மின்னிப் பினைந்து கண்ணியம் வேண்டி நிற்கும் 'லைலத்துல் கத்ர்' எனும் கண்ணியமிக்க இரவு இனையற்ற மகத்துவமானது. இவ் விரவில் அல்லாஹ்வின் அற்புத அருளை அடைந்து கொள்வதில் இறைவிசுவாசிகளுக்குள்ள ஆர்வத்தை காணும் "மலக்குகள்" மனிதனின் பாவப் பிழை பொறுக்க இறைவனிடம் மன்றாடுவார்கள்.

அல்லாஹ்வுக்கும் அவனது தூதுவர்களுக்கும் முழுமையாக வழிபட்டொழுகும் மாந்தருக்கு வானத்திற்கும் பூமிக்குமிடையேயுள்ள அத்தனை படைப்புகளையும் வசப்படுத்திக் கொடுப்பதாக இறைவன் அல்-குர் ஆனில் உறுதிமொழி வழங்கியுள்ளான்.

எம்.ஏ.காதர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் கந்தசுவாமி கோயில்

தேர்த் திருவிழாச் சிறப்புமலர் 07.09.2010





தேரேறும் திருமுருகா.... உன் திருவடி தொழுதோம் எமைத்
தினமும் இங்கே காத்தருள்வாய்

ஆர்.வி.ஜி மருந்தகம்
504, ஆஸ்பத்திரி வீதி,
(O.P.D முன்பாக) யாழ்ப்பாணம்.
தொ.பே. 0212222129

ஆங்கில மருந்து வகைகள்,
ஊட்டச்சத்துக்கள்
மற்றும் பால்மா வகைகள்
அனைத்தையும்
நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

R.V.G ஸ்தாபனம்
58, நல்லூர் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 6806



நல்லூரின் நாயகனே எமக்கு அருள் தாருமையா?


HNB PATHUM VIMANA 2010

HNB

சின்னச்சின்ன பரிசுகள் போதவில்லையா?
இது ஒரு சாதாரண சீட்டிழுப்பு அல்ல



October-Harvest Draw
ඔක්තෝබර්-රන් අස්වනු දිනුම් ඇදීම
ஒக்டோபர் – அறுவடைச் சீட்டிழுப்பு



December-Bonus Draw
දෙසැම්බර්-බෝනස් දිනුම් ඇදීම
டிசெம்பர் – போனஸ் சீட்டிழுப்பு





"நல்லூரின் நாயகனே! தேரேறி வருக வருக!

Green Grass Hotel & Restaurant



Pool bar, Swimming pool, Conference Hall We accept orders to provide Lunch Dinner for Parties Vegetarian Non vegeta rian. Take away Parcel. Ac Rooms Available Convference Hall Facilities. international TV& Tele Phones.

T.P:- 021 222 4385, 021 222 1686
Fax:- 021 222 4385.

No.33, Aseervatham Lane.
Hospital Road, Jaffna.



வருக வருக முருகா தேரேறி வருக....

ஆர்க் என்ரப்பிறைசஸ்

யாழ்.நகரில் அழகிய தரம்மிக்க பொருள்களுக்கு
என்றுமே ஆர்க் என்ட பிறைசஸ்

*T.P. 021 2224021*
*021 222 2052*

*150, 152, Stanly Road Jaffna*
*E.mail: ark Jaffna @yahoo.com*





வடிவேலவனே! தேரேறி வருக வருக!

Harini Internet Cafe

Local, IDD, Net2 Phones, Video Calls, Photo Copy, Fax,
Scaning, Reloads, CD, DVD Writing,Typing, Stationeries etc.....

K.K.S. Road, Kokuvil.Jaffna.

T.P. 021 7451890
Fax. 021 7451995





தேரேறி வந்து பக்தர்களுக்கு அருள் தாருமையா

MD-90 Honda, Lancer 50 Honda, Safari 4S49CC,
Kuboto 550 Land Master வாகன Battery வகைகள்,
வாகன ரயர், ரியூப், Ceypetco Oil வகைகள்,
LML Freedom மோட்டார் சைக்கிள்
உதிரிப்பாகங்கள், LML ஸ்கூட்டர்
உதிரிப்பாகம் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள்
நாடவேண்டிய இடம்







S.P.N.MOTORS

145, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் நடைபெற்ற நடமாடும் சேவையில் 6,800 விண்ணப்பங்கள்; 530 பிறப்பு இறப்புப் பதிவுகள்

## பிரதிப் பதிவாளர் நாயகம் தகவல்

முல்லைத்தீவு,செப்.7

முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற நடமாடும் சேவையின் போது 6 ஆயிரத்து 800 விண்ணப்பங்கள் பெறப்பட்டதாகவும், 530 பிறப்பு, இறப்புக்கள் பதிவு செய்யப்பட்டதாகவும் பிரதிப் பதிவாளர் நாயகம் ந.சதாசிவஐயர் தெரிவித்தார்.

நிதி அமைச்சின், சுனாமி மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான அமைப்பின் உதவியுடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடமாடும் சேவை கடந்த முதலாம் திகதி வற்றாப்பளை மகா வித்தியாலயத்திலும் 3ஆம் திகதி ஒட்டுசுட்டான் கற்சிலைமடு மகா வித்தியாலயத்திலும் நடைபெற்றது.

பதிவாளர் நாயகம் ஈ.எம்.குணசேகர இரு தினங்களும் சமுகமளித்து மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கினார். பிரதிப் பதிவாளர் நாயகம் ந.சதாசிவ ஐயரும் மற்றும் வடக்கு வலய,கிழக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகங்களும் இதன்போது சமுகமளித்திருந்தனர். இரு நாள்களிலும் பதியப்படாத பிறப்புக்கள் பதியப்பட்டதுடன் விவாக, பிறப்பு, இறப்புச் சான்றிதழ்களுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இவற்றுக்கான சான்றிதழ்கள் இரு வாரங்களில் உரியவர்களுக்குக் கிடைக்க ஆவன செய்யப்படும் எனவும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

இறந்தவர்கள், காணமற்போனவர்கள் தொடர்பில் பொலிஸார் மூலம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு பிரதிகள் வழங்கப்பட்டன.முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகனின் ஏற்பாட்டில் நிதி யமைச்சின் திட்ட முகாமையாளர்கள் எம்.திருநாவுக்கரசு மற்றும் ஜானக ரணதுங்கபோன்றவர்கள் நிகழ்வுகளை ஒழுங்கு செய்திருந்தனர். சகல சேவைகளும் இலவசமாக வழங்கப்பட்டடன. (த)

# கணேசபுரம் வயல்களில் துப்புரவுப் பணிகள்

கிளிநொச்சி ,செப்.7

கிளிநொச்சி கணேசபுரம் பகுதியில் பற்றைக்காடுகளாக இருந்த வயல் நிலங்கள் கணேசபுரம் கமக்கார அமைப்பின் ஏற்பாட்டில் காணி உரிமையாளர்களால் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

கடந்த 10 வருடங்களாகப் பயன்படுத்தபடாது பற்றைக்காடாக இருந்த இவ்வயல் நிலங்கள் இம்முறை காலபோக நெற்செய்கைக்குப் பயன்படுத்தபடவுள்ளதாகக் கணேசபுரம் கமக்கார அமைப்பினர் தெரிவித்தனர்.

இப்பகுதியில் உள்ள இப்பற்றைக் காடுகளுள் பல சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெற்று வருவதையும் இப்பகுதியில் இருந்து பல விஷ ஜந்துக்கள் வெளிவருவதையும் அவதானித்த கமக்கார அமைப்பினர் அக்காணிகளின் உரிமையாளர்களுடன் தொடர்பு கொண்டு துரிதமாகத் துப்புரவு செய்து வருகின்றனர்.

சுமார் 60 ஏக்கர் வரையான வயல் நிலம் இவ்வாறு துப்புரவு செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-405)

# பளை கோட்டக் கல்வி அதிகாரியாக ஆனந்தசிவம்

கிளிநொச்சி ,செப்.7

கிளிநொச்சி கல்வி வலயத்தின் பளை கோட்டக்கல்வி அதிகாரியாக சுப்பிரமணியம் ஆனந்தசிவம் நியமிக்கப்பட்டுள்ளார். வடமாகாணக் கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள இவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

இலங்கை அதிபர் சேவையின் தரம் 1 இனைச் சேர்ந்த இவர் பயிற்றப்பட்ட விவசாய ஆசிரியராக கிளிநொச்சி வன்னேரிக்குளம் ம.வியில் தனது கல்விப் பணியினை ஆரம்பித்தார். கடந்த 17 ஆண்டுகளாக அதிபராகக் கடமையாற்றிவரும் இவர் வன்னேரிக்குளம் ம.வி, ஸ்கந்தபுரம் இல-01 அ.த.க.பாடசாலை ஆகியவற்றில் அதிபராகக் கடமையாற்றியவராவார்.

பளைக் கோட்டத்தில் மீள்குடியேற்றம் இடம்பெற்று பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னரும் நீண்ட காலமாகக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பதவி வெற்றிடமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-405)




# அடிப்படை வசதிகளின்றி பல்லவராயன்கட்டு மக்கள்

கிளிநொச்சி ,செப்.7

கிளிநொச்சி, பல்லவராயன்கட்டைச் சேர்ந்த மக்கள் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அவற்றில் தங்களுக்குப் போதியளவு வசதிகளை அரசு செய்து கொடுக்கவில்லையென அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தாம் குடிதண்ணீர் பெறுவதற்குப் பல மைல் தூரம் நடந்து செல்வதாகவும், மலசலகூடங்கள் போரில் சேதமடைந்துள்ளமையால் அன்றாடக் கருமங்களை நிறைவேற்றப் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

தமக்குக் குடிதண்ணீர் வசதி, மலசலகூட வசதி போன்றவற்றை விரைவில் செய்து தருமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-312)

# மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஓராண்டு நிறைவையொட்டி இலக்கியப் போட்டிகள்

மன்னார் ,செப்.7

மன்னார் தமிழ்ச்சங்கத்தின் முதலாம் ஆண்டு நிறைவையொட்டி தமிழ்ச் செம்மொழி விழாவை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 22 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதிவரை நான்கு நாள் விழாவாக நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டு விழா ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக அதன் செயலாளர் அறிவித்துள்ளார்.

இச் செம்மொழி விழாவில் பலர் தமிழியல் வரலாறு தொடர்பாக ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்து உரையாற்றவுள்ளனர். மேலும் கவிதை, சிறுகதை போட்டிகளிலும் பங்கு பெறலாம். ''ஈழத்தமிழர்களின் அவலம்'' எனும் கருப்பொருளை மையப்படுத்தி தலைப்பைப் போட்டியாளர்களே தீர்மானிக்கலாம். சிறுகதை ஆயின் மூன்று தொடக்கம் ஐந்து பக்கங்களும் கவிதை எனில் மரபுக்கவிதை என்றால் ஆறு தொடக்கம் ஒன்பது பந்திகளில் எழுத வேண்டும். புதுக்கவிதைக்கு வரையறை இல்லை.

இப்போட்டிக்கு எழுதப்படும் ஆக்கங்கள் வேறு போட்டிக்கு இடம்பெற்றதாக இருத்தல் ஆகாது. தூயதமிழில் எழுதுவது ஏற்புடையது. ஆக்கக் கர்த்தாக்களது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்றவற்றைத் தனித்தாளில் எழுதவும். ஆக்கங்கள் யாவும் இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னதாக எஸ்.திவாகரன்,பொதுச் செயலாளர், மன்னார் தமிழ்ச் சங்கம், இல.30 வைத்தியசாலை வீதி, மன்னார் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். தாமதமாக வரும் ஆக்கங்கள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது. அத்துடன் சிறந்த படைப்புகளுக்கு பணப் பரிசும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இவ்விழா தொடர்பானதும் போட்டிகள் சம்பந்தமாகவும் மேலதிக விவரங்களைப் பெறுவதற்கு 0233233276,0714973824 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (க-80)

# கல்மடுநகர் சேதமடைந்த வீடுகளை புனரமைக்க யு.என்.ஹபிற்றற் உதவி

கிளிநொச்சி ,செப்.7

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கல்மடுநகர் கிராம அலுவலர் பிரிவில் மீள்குடியேறியுள்ள மக்களின் சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கான உதவிகளை வழங்க யு.என்.ஹபிற்றற் நிறுவனம் முன்வந்துள்ளது.

இது தொடர்பாக மக்களுடனான கலந்துரையாடல் கடந்த வாரம் இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்றது. இதில் யுத்தத்தின் போது சேதமடைந்துள்ள வீடுகளைத் திருத்துவதற்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை வழங்குவதாகக் குறித்த நிறுவன பிரதிநிதி உறுதியளித்தார். எனினும் வீட்டிற்கு ஓடுகளால் கூரை அமைக்கப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

ஓடுகளால் கூரையினை அமைப்பது தொடர்பில் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். ஏற்கனவே சீற் போடப்பட்டிருந்த வீடுகளுக்கு ஓடுகளால் கூரை அமைப்பதற்கு குறித்த நிதி போதாதுள்ளதாவும் சிலர் ஏற்கனவே கூரைகளை சீற்றினால் அமைத்துள்ளதாகவும் தெரிவித்தனர். இதனால் மக்களுக்கு இவ்வுதவியினைப் பெறமுடியாமல் போகக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. மீள்குடியேற்றம் நிகழ்ந்து பல மாதங்கள் பூர்த்தியடைந்துள்ள நிலையில் மக்கள் தமது வசதிக்கேற்ப சீற்றினால் கூரைகளை அமைத்து குடியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படு கின்றது. எனவே உரியவர்கள் இது தொடர் பாகவும் கவனம் செலுத்தி இடம்பெயர்ந்து பல இன்னல்களை அனுபவித்து மீள்குடியேறியுள்ள இம்மக்களின் வீட்டுத்திருத்திற்கான உதவிகளைப் பெறுவதற்குஉதவமுன்வர வேண்டும் என மக்கள் கோருகின்றனர். (க-405)

# ரூபா 50 லட்சம் பெறுமதியான ஆயுதங்கள் உமையாள்புரம் கிணற்றிலிருந்து மீட்பு

கிளிநொச்சி ,செப்.7

பரந்தன் - உமையாள்புரத்திலுள்ள வைரவர் ஆலயத்துக்கு அருகில் அமைந்துள்ள கிணறொன்றிலிருந்து பெருமளவு சுடுகலன்கள், குண்டுகள், பல்வேறு ரகங்களைச் சேர்ந்த பயன்படுத்தப்படாத பெருந்தொகையான ரவைகள் உள்ளிட்ட யுத்த உபகரணங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக விசேட பொலிஸ் செயலணி தெரிவித்துள்ளது.

இவற்றின் பெறுமதி ஏறத்தாழ ஐம்பது லட்சங்கள் வரையில் இருக்கலாமெனவும் விசேட பொலிஸ் செயலணியின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இவையனைத்தும் மீளவும் பயன்படுத்தத்தக்க விதத்தில் மிகவும் பாதுகாப்பாகப் பொதி செய்யப்பட்டு கிணற்றினுள் இடப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அப்பிரதேசப் பொதுமக்களால் விசேட பொலிஸ் செயலணிக்கு வழங்கப்பட்ட தகவலொன்றை அடுத்தே இவை கண்டெடுக்கப்பட்டுள்ளதோடு மேலதிக விசாரணைகளுக்காக இவை கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (த)

# கேள்விப்பத்திரங்களை அனுப்பிவைக்கவும்

பூநகரி ,செப்.7

பூநகரிப் பிரதேச சபையின் வேலைத் திட்டங்களுக்கான கேள்விப் பத்திரங்களை இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணி வரை தலைமை அலுவலகத்தில்பெற்று-

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்களை எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர் பிரதேச சபை பூநகரி என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு சபையின் செயலாளர் அறிவித்துள்ளார்.

மேலும் அதன் பிரதி மையப் பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் கிளிநொச்சி என்ற முகவரிக்கும் அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும் கேள்விகள் இம்மாதம் 13 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்குத் திறந்து பரிசீலிக்கப்படும் எனவும் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-15)



இடம்பெயர்ந்த வன்னி மக்களின் சொத்துக்கள் தென்பகுதிக்குக் கொண்டு செல்லப்படுவதற்குத் தயாராகக் குவித்து வைக்கப்பட்டிருப்பதைப் படங்களில் காணலாம். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அரிய வாய்ப்பினைத் தவறவிடாதீர்கள்!

அனுமதி இலவசம்

2009 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கல்விக் கண்காட்சியின் பாரிய வெற்றியின் பெருமிதத்துடன் Pico Events வழங்குகிறது.



Organized by pico Events

செப்டம்பர் 18–19ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் மத்திய கல்லூரியில்

மேலும் விவரங்களுக்கு:-
அஞ்சலா – 0778036854

யாழ் கல்விக் கண்காட்சியானது அதிகரித்து வரும் கல்வி, உயர்கல்வித் தேவைகளை வடமாகாணத்தில் நிறைவு செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள முன்னோடி கண்காட்சியாகும். முதலாவது கண்காட்சியின் வெற்றியின் அடிப்படையில், யாழ்ப்பாணத்து மாணவர் சமூகத்தினை நேரடியாக ஒரேயிடத்தில் பார்ப்பதற்கு விரும்பும் எவருக்கேனும் இதுவே பொருத்தமான இடமாகும். முதலாண்டு கண்காட்சியைப் போன்றே இந்நிகழ்வும் உலகின் பலபாகங்களிலுமுள்ள முன்னணி கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றை பிரதிபலிப்பதாக இருக்கும்.

**காட்சிப்படுத்தப்படும் அனைத்துப்பிரிவுகள்**

கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், வணிகக்கல்லூரிகள், மற்றும் பொறியியல் மருத்துவ, மருந்தாக்க, சுகாதார, விமானசேவை, தகவல் தொழில்நுட்பம், பல்லூடகம், இணைய வடிவமைப்பு, முகாமைத்துவம், வர்த்தகம் என்பவற்றிற்கான பயிற்சி நிறுவனங்கள்.

நிர்வாகம், மனிதவள அபிவிருத்தி, விற்பனையும் சந்தைப்படுத்தலும், வங்கியியல், சட்டம், கணக்கீடு, புதுத்தோற்ற வடிவமைப்பு.

ஆடைதயாரிப்பு, அழகுக்கலையும் ஆட்கள் அலங்கரிப்பு, கட்டடக்கலையும், நில அளவீடும், ஹோட்டல்துறை மற்றும் உணவு வழங்கல், மொழிகள், இசைநடனம், மயக்கமூட்டற் கற்கைகள், தொழிற் பயிற்சி மற்றும் ஆதாரசேவைகள் (நூல்கள், வெளியீடுகள், கல்விசார் துணைக்கருவிகள், கணினி, காகிதாதிகள்)



JEF
Jaffna Education Fair 2010

BRITISH COUNCIL · Daily News · pico


# ஆஸிக்கு ஆட்கடத்தல்; ஈழத்தமிழ் அகதி கைது

கொழும்பு, செப்.7

சட்டவிரோதமாக இலங்கைத் தமிழ் அகதிகள் சிலரை ஆஸ்திரேலியாவிற்கு படகில் அழைத்துச் செல்லமுயன்றார் என்ற சந்தேகத்தின் பேரில் எஸ்.சந்திர காந்தன் என்ற அகதி ஒருவர் தமிழ்நாடு, திருநெல் வேலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக் கிறார்.

அவரது ஏற்பாட்டில் பயணம் செய்வதற்காக 53 அகதிகள் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தென்காசியில் காத்திருந்தது தெரிய வந்தது எனவும், அவர்களை விசாரித்தபோதுதான் சந்திரகாந்தனின் நடவடிக்கைகள் பற்றி பொலிஸார் அறிந்து கொண்டனர் எனவும் அதன் பின்னர் அவர் கைதானார் எனவும் செய்திகள் கூறுகின்றன.

அந்த 53 பேரும் அவரவர் அகதி முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள், கடந்த இரண்டாண்டுகளாக தமிழக முகாம்களில் வசித்துவருகிறார்கள். (சி)


**SHAMROCK**
ஈச்சமோட்டை, யாழ்.
**A/L 2012**
தமிழ் - S.சிவா
Sat, Sun 5pm
* அளவை - S. ரொபேசியன்
Wed, Fri 5pm
* புவி - S. ஜீன்சியா
Thurs - 5pm, Sat 4pm
* அரசியல் - S.S. ரேந்திரன்
Sat, Sun 11am
* கிறீஸ் + நாக - S.K.யூட்
Wed 4pm, Thurs 4 to 6pm, Fri 4 pm
* நாடகம் : N.சுஜீதரன்
Mon, Tue 5pm

## விற்பனைக்கு

எம்மிடம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்கல மணிகள் 5கிலோ தொடக்கம் 1000 கிலோ வரை பெற்றுக்கொள்ளலாம்.

மற்றும் உயர்தர விதிமுறைகளுக்கு அமைந்த கோயில் கலசங்கள், தீபங்கள், குத்துவிளக்குகள், சரவிளக்குகள், கெண்டிவகை, பட்டுக் குடைகள், ஆலவட்டக் குடைகள், கும்பக் குடைகள், திருவாசிகள், வெண்சாமரை, சோட உபசார செற்றுகள், கும்பதீபங்கள், பஞ்சாலாத்திகள், அடுக்குத் தீபங்கள் இன்னும் பல தீபங்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**பிள்ளையார் மெட்டல்**
இல.64, வைரவர் கோயில் வீதி,
வைரவப் புளியங்குளம், வவுனியா.
தொ.பே: 024 222 2097
024 222 0129

## விற்பனைக்கு

எம்மிடம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்கல மணிகள் 5கிலோ தொடக்கம் 1000 கிலோ வரை பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:- **சுப்பிரமணியம் சரவணபவன்**
சிற்ப ஆசாரி 14BA, தம்பி லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி-021 490 0085
077 411 2049

## விற்பனைக்கு

எம்மிடம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்கல மணிகள் 5கிலோ தொடக்கம் 1000 கிலோ வரை மற்றும் கோயில் பொருள்கள், தீப வகைகள், பட்டுக் குடை, திருவாசிகள் என்பனவும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:- **சி.சிவானந்தன்**
கந்தசாமி கோயில் முன்பாக
சுபாஜினி ரேட்டேர்ஸ்
A.09,வீதி, கிளிநொச்சி.
தொ.பே:- 0779779726

## ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள்

edexcel
**HND**
**Higher National Diploma**
**HND in Computing (General)**
**HND in Computing (ICT System Support)**
**HND in Computing (Software Development)**

bcs The Chartered Institute for IT
British Computer Society

**Certificate in IT**
**Diploma In IT**
**Professional Graduate Diploma in IT**



**இரண்டு கற்கை நெறிகள், ஒரு கற்கை நெறிக்கான கட்டணம் !**

தகவல் தொழில் நுட்பத்துறையில் உலகின் தலை சிறந்த தகைமைகளை வழங்கி வரும் ஜாம்பவான்களான BCS, Edexcel நிறுவனத்தின் HND சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கான அரிய வாய்ப்பினை IIS City Campus நிறுவனம் ஏற்படுத்திக்கொடுக்கின்றது. HND கற்கை நெறிக்கு பதிவினை மேற்கொள்ளும் மாணவர்கள் முற்றிலும் இலவசமாக BCS கற்கை நெறியினை பயிலமுடியும்.

மேலதிக விபரங்களுக்கு : 021 4900 900

உலகின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் துறையிலே உயர்கல்வியினை வழங்கிவரும் பிரித்தானிய BSC (British Computer Society) நிறுவனமானது 1969ம் ஆண்டிலிருந்து தனது சேவையை ஆற்றி வருகின்றது. இந்நிறுவனம் வட இலங்கையிலே தனது கல்விச் செயற்பாட்டை விஸ்தரிக்கும் முகமாக IIS CITY CAMPUS நிறுவனத்துடன் சேர்ந்து இயங்கவுள்ளது. இந்நிறுவனத்தின் கற்கை நெறிகள் யாவும் எதிர்வரும் September மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். வட இலங்கையிலே BCS நிறுவனத்தின் நேரடியான அங்கீகாரம் பெற்ற ஒரே ஒரு பயிற்ச்சி மையம் IIS CITY CAMPUS என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

உலகின் தலைசிறந்த இரண்டு நிறுவனங்களின் சான்றிதழை குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பினை IIS CITY CAMPUS நிறுவனம் குடாநாட்டு மாணவர்களுக்கு ஏற்படுத்திக்கொடுக்கின்றது. இலங்கையில் இதுவரை எந்த ஒரு நிறுவனமும் சிந்திக்காத வழங்காத வாய்ப்பாகும்.

**IIS CITY CAMPUS**
200,Sivan Pannai Road, Jaffna
Tel:-021 222 8060 Fax:-021 222 6933
Web:- iis.edu.lk


## 31ஆம் நாள் நினைவு



**திருமதி பூரணம் கந்தையா**

அன்னையே!
எங்கள் இதயத்தில் உறையும் தெய்வமே!
உங்களுடன் வாழ்ந்த காலங்கள்
எங்களுக்குக் குதூகலமான இன்ப நாள்கள்
இன்று ஆற நிழலுமில்லை
ஆறுதலுக்கு வார்த்தைகளுமில்லை.
உங்கள் ஆத்மா இறைவன்தாள் பெறுக
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உங்கள் நினைவில்:
உடுவில் தெற்கு, சுன்னாகம்.
கணவர், பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய ரீதியிலான எல்லே போட்டிகள் 11 ஆம் திகதி முதல் குருநாகலில்

## வடமாகாணத்திலிருந்து 6 அணிகள்

வலி.வடக்கு, செப் 07

இலங்கை கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெறவுள்ள ஆண்கள், பெண்களுக்கான எல்லே விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 11ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை குருநாகல் மாலிகதேவ வித்தியாலய மைதானம், புனித அந்தோனியார் கல்லூரி மாலிக பிட்டிய மைதானம், ஹல்கடுவ டி.வி. வெலகெதர வித்தியாலய மைதானம் ஆகியவற்றில் நடைபெறவுள்ளன. இப்போட்டியில் ஆண்கள் பிரிவில் 560 இற்கும் மேற்பட்ட வீரர்களும், பெண்கள் பிரிவில் 560 இற்கு மேற்பட்ட வீராங்கனைகளுமாக சுமார் ஆயிரத்து 120 பேர் கலந்து கொள்ளவுள்ளனர்.

வட மாகாணத்தின் சார்பில் ஆண்கள் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, மன்னார் பாத்திமா மத்திய மகா வித்தியாலயம் ஆகியன கலந்துகொள்ளவுள்ளன.

பெண்கள் பிரிவில் வடமராட்சி மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, வடமராட்சி மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி ஆகியன கலந்துகொள்ளவுள்ளன. (த-86)

## உதைபந்தாட்டம்

பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகத்தின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மாலை 4 மணிக்கு நாமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி மோதும். (த-23)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# தியாகிகள் தின உதைபந்தாட்டம்; இறுதியாட்டங்கள் ஞாயிறன்று

வலி.வடக்கு, செப் 07

தியாகிகள் தினத்தை முன்னிட்டு பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை




முன்னணி யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணியளவில் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

9 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் 3 மணிக்கு இடம்பெறும். இதில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழக அணி மோதும்.

11பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் 4.30 மணிக்கு இடம்பெறும்.

இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி மோதும்.

இந்நிகழ்விற்கு வடக்கு-கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவருமான அ.வரதராஜப்பெருமாள் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி



யின் செயலாளர் சிறிதரன், யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் கிளிபேட் அன்ரனிப்பிள்ளையும் கலந்துகொள்வர்.(த-23)

# சாதனைப் பட்டியலில் இடம்பெறுகிறார் ஹேரத்

வலி.வடக்கு, செப் 07

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய மெய்வல்லுநர் போட்டிகளில் பெண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த சி.எம்.சி.எல்.ஹேரத்தின் பெறுபேறு சிறந்த பெறுபேறாகக் கொண்டு சாதனைப் பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்ட நிலையில் வடக்கு மாகாணத்துக்கான சாதனைப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் கடந்த 2007, 2009, 2010 ஆம் ஆண்டுகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2007ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.துஷ்யந்தி 5:37:5 செக்கனிலும் 2009ஆம் ஆணடு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த இ.எம்.சி.எல்.ஹேரத் 5:28 செக்கனிலும் 2010ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். மதுரா 5:30:1 செக்கனிலும் பெறுபேறுகளை பதிவு செய்துள்ளார்கள்.

வடமாகாணத்தில் பெண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப் போட்டியின் புதிய சாதனையாக வவுனியா மாவட்டத்தின் இ.மெ.சி.எல்.ஹேரத்தின் 5:28:0 செக்கன் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(த-86)

# பாடும்மீன் வி.கவை வென்றது சிவானந்தா

யாழ்ப்பாணம்,செப்.7

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் சிவானந்தா விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

கடந்த சனிக்கிழமை புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சிவானந்தா விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் சிவானந்தா விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது. (த-23)

# ஜனாதிபதி தங்கக்கிண்ணக் கரப்பந்தாட்டம்; அமைச்சர் செனவிரத்ன ஆரம்பித்துவைத்தார்

வலி.வடக்கு, செப் 07

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 40 ஆவது ஆண்டு நிறைவையொட்டி ஜனாதிபதி தங்கக்கிண்ணத்துக்காக யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ஆகியவற்றின் ஆண்கள், பெண்கள் அணிகளின் கரபந்தாட்டப் போட்டிகள் நேற்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்னவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

விளையாட்டு மைதானத்துக்கு வருகை தந்த அமைச்சர் செனிவிரத்ன, பிரதியமைச்சர் டிலான் பெரேரா, பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் உயர் அதிகாரிகள் ஆகியோர் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள் ஆகியோரினால் வரவேற்கப்பட்டனர்.

மங்கள விளக்கினை அமைச்சர் செனவிரத்ன, பிரதியமைச்சர் டிலான் பெரேரா, அமைச்சின் செயலாளர், அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தேசியக் கொடியினை அமைச்சர் ஏற்றி வைக்க அதனைத் தொடர்ந்து கரப்பந்தாட்ட சங்கத்தின் கொடியினை பிரதியமைச்சரும், மாவட்டக் கொடியினை அரச அதிபரும் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து அரசாங்க அதிபர், மாவட்ட விளையாட்டு அலுவலர்கள் ஆகியோர் வீரர்கள், வீராங்கனைகளை அமைச்சர் குழுவினருக்கு அறிமுகம் செய்து வைத்தனர். (த-86)

# யங் கென்றிஸ் வெற்றி

யாழ்ப்பாணம்,செப்.7

மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் யாழ்.மாவட்டத்தின் அழைக்கப்பட்ட உதைபந்தாட்டக் கழகத்தின் கழகங்களுக்கு இடையிலான லீக் போட்டியில் இளவாலை யங் கென்றிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் இளவாலை யங் கென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவசக்தி விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் இளவாலை யங் கென்றிஸ் விளையாட்டுக் கழக அணி எதிர்த்து விளையாடிய நவசக்தி விளையாட்டுக் கழக அணியை 8:1 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது.

(த-23)

# கைதடி துர்க்கா வென்றது

யாழ்ப்பாணம்,செப்.7

யாழ்.மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த சனிக்கிழமை உடுவில் ஆலடி இந்து விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் கைதடி துர்க்கா விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

இதில் கைதடி துர்க்கா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் கைதடி துர்க்கா விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக்கழக அணியை 10:4 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது. (த-23)



பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 40ஆவது ஆண்டு நிறைவையொட்டி ஜனாதிபதி தங்கக் கிண்ணத்துக்கான கரபந்தாட்டப் போட்டியை ஆரம்பித்து வருகை தந்திருந்த பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன்செனவிரத்ன, பிரதியமைச்சர் டிலான் பெரேரா, அமைச்சின் செயலாளர் ஆகியோர் அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் ஆகியோரால் அழைத்துவரப்படுவதை முதல் படத்திலும், அமைச்சர்கள் மங்கள விளக்கேற்றுவதை இரண்டாவது படத்திலும், வீரர்கள் அணிவகுத்து நிற்பதை மூன்றாவது படத்திலும், வீரர்கள் அறிமுக நிகழ்வு இடம்பெறுவதை இறுதிப்படத்திலும் காணலாம்.

(படங்கள்: நேசன், தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லூர் கந்தசுவாமி கோயில்

தேர்த் திருவிழாச் சிறப்புமலர் 07.09.2010



வருவாய் வந்தருள் புரிவாய் வேலனே

பலசரக்கு மற்றும் மிக்சர் தயாரிக்கும் பொருள்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறுவதற்கு நாடவேண்டிய ஒரே இடம்

## ஜெகன் களஞ்சியம்

இல.475, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

தேரேறி வரும் முருகா!
மண்ணில் நீடித்த அமைதி நிலவ வேண்டும் முருகா!



## ராஜா கிறீம் ஹவுஸ்

குளிர்ச்சியின் சிகரம் ராஜா!
அறுசுவையின் சின்னம் ராஜா!

சுகாதார முறைப்படி, தரமான சுவைகுன்றாதயாரிப்புக்களே ராஜாவின் இத்தனைகால சேவையின் முத்திரை! கொழுத்தும் வெய்யிலிலும் உங்களைக் குளிர்ச்சியில் மூழ்கடிக்க புத்தம் புதிய வகைத் தயாரிப்புக்களுடன் உங்களைக் வரவேற்கின்றது..



**ராஜா கிறீம் ஹவுஸ்**
36, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



தேரிலே பவனிவந்து அடியார்களுக்கு
அருள் மழை சொரிந்திடையா வள்ளி மணாளா!

## வீடுகள் கட்டடங்கள் கட்ட விரும்புபவர்களுக்கு ஒரு வாய்ப்பு

உங்கள் வீடு கட்டும் பொறுப்பை யாரிடம் ஒப்படைப்பது என்று யோசிக்கின்றீர்களா?
எங்களிடம் ஒப்படையுங்கள். சிறந்த முறையில் நிறைவேற்றித் தருகிறோம்.

- ★ இலவச வீடமைப்பு ஆலோசனை
- ★ இலவச வீட்டுப்படம் (Plan) வரைதல்
- ★ வீடு கட்டியபின் வீட்டுத்தோட்டம் (Land Scaping) அமைத்தல் இலவசம்
- ★ நவீன தொழில்நுட்ப (Latest Technology) முறைகள் மூலம் குறைந்த செலவில் வீடுகள் அமைக்கமுடியும். இதனால் எல்லோரும் ஒரு வீட்டிற்கு உரிமையாளர் ஆகலாம்
- ★ 100% நம்பிக்கை நாணயம்
- ★ குறுகிய காலத்திற்குள் வீடு அமைக்கப்படும்.
- ★ சாத்திர முறைப்படி வீடுகள் அமைக்கப்படும்
- ★ நவீன வீடுகள் (Modern House in Latest Fashion)
- ★ பழைய வீடுகள் முன்முகப்பு உட்பட புதிய பசன் (Latest Fashion) இற்கு மாற்றி அமைத்தல்
- ★ நிதி நிலைக்கேற்றவாறு சிறிய வீடுகள் அமைத்தல்
- ★ நிதிபற்றாக்குறை ஆயின் வங்கிக் கடன் உதவி ஒழுங்கு செய்துதரப்படும்.
- ★ இலங்கையின் எப்பகுதியிலும்(நிலம் வாங்குதல் உட்பட) வீடுகள் அமைக்கப்படும்
- ★ மாநகர சபைஅங்கீகாரம் விரைவாகப் பெற்றுத்தரப்படும்



குறிப்பு: பழைய வீடொன்றை வாங்குவதை விட உங்கள் விருப்பப்படி புதிய வீடொன்றை அமைத்து புதிய வீட்டிற்கு உரிமையாளராகுங்கள்.

தொடர்பு கொள்ளுங்கள் எம்மிடம் வாருங்கள். 0786155929- 021 3205959

**ANANDA HOUSING CONSTRUCTIONS** Reg.No: TN/UC/0011

பருத்தித்துறை வீதி,
மடத்தடிச் சந்தி, சாவகச்சேரி.

email- ananda. housing@yahoo.com

தேரினிலே பவனிவரும் திருக்குமரா! தேவர் இடர் தீர்த்த திருச்செந்தூர் வேலா பாவிகள் படும் கஸ்டங்களோ பலகோடி ஐயா! பாரினில் பாராமுகம் கொண்டிருப்பது ஏனோ ஐயா! தரணியில் தலைநிமிர்ந்து நாம் வாழ்திட ஐயா! நீக்க வழிகாட்டும் பழனி வேலவா வருகவே...



## சாயிராம் வர்த்தக நிறுவனம்
## SAIRAM TRADING COMPANY

குளிர்சாதன உதிரிப்பாகங்கள், GAS வகைகள், L.G கொம்பிறசர்கள், மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

சாயிராம் வர்த்தக நிறுவனம், 101, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

அடியவர் எமக்கருள்வாய்!

"நாதஸ்வர மேளம்
தாளந்தோடிணைய
நல்லையின் மணியோசை
நாற்றிசையும் ஒலிக்க
சீதமதிக் குடைக்கீழ் நாம்
சிங்காரம் காண
சிந்தையிலே வந்தமர்வான்
சிவனாரின் மைந்தன்
மாதிருவர் சூழ வரும்
மன்னனிவனாக
மயூரன் மனம் கனிந்தருள
மயிலேறி வருவான்
ஆதாரம் இவனென்றே அடியார்
பதம் பற்ற
அழகுத் தேரேறி வந்து
அடியவர் எமக்கெருள்வாய்!

தேவிகணேஸ்,
இராசாவின் தோட்டம்.



நல்லைக் கந்தன் அருள் ஆசி நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் வேண்டி
நல்லூர் திருவிழாவை முன்னிட்டு

## மபெரும் தள்ளுபடி விற்பனை.

| | | |
|---|---|---|
| ★ The Oxford Children's Illustrated Encyclopedia | ~~7500/=~~ | 3500/= |
| ★ ஆங்கிலம்- தமிழ் சொற்களஞ்சியம் University of Madras | ~~950/=~~ | 450/= |
| ★ MEGA Deluxe Dictionary English- Tamil தற்கால சொற்களைக் கொண்ட ஒரே அகராதி | ~~1040/=~~ | 800/= |
| ★ University Deluxe Dictionry English- English- Tamil. 21ஆம் நூற்றாண்டின் நிகரற்ற அகராதி | ~~1550/=~~ | 950/= |
| ★ Oxford Elementary Learner's Dictionary. | ~~478/=~~ | 370/= |
| ★ Oxford Learner's Pocket Dictionry. | ~~385/=~~ | 300/= |
| ★ Collins Cobuild English Dictionry. | ~~1950/=~~ | 900/= |
| ★ பிரிட்டானியா தகவல் களஞ்சியம் | ~~20000/=~~ | 15000/= |
| ★ தமிழர்களின் பாரம்பரியத்தை எடுத்துக்காட்டும் படங்கள் கொண்ட தபால் அட்டைகள் விற்பனைக்குண்டு. | ~~50/=~~ | 25/= |



கடன் வியாபாரம் கடனட்டைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.காசு வியாபாரம் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ், 212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

நல்லூர் கந்தனுக்கு அரோகரா!






## நியூ ராஜ்குமார் ரேடர்ஸ்
## NEW RAJHKUMAR TRADERS


45.Adiyapatham Rd,
Thirunelvely, Jaffna.

45, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.



T.P: 021 300 1520


தேரிலே ஆரோகணித்து அடியார்களின் இன்னல்களை அறுத்திடுவாய் அலங்காரக் கந்தனே!




## Seelan Aluminium Fitting
## சீலன் அலுமினிய பிற்றிங்

DOHA, DUBAI இல் 10 வருட அனுபவமுள்ளவர்....

No: 54, K.K.S Road, Kokuvil Junction.
Tel: 021 4902561- 077 8050918- 0789119220.



புள்ளி மயிலோனே முருகா சரணம்!




## கஜன் குறூப்



காகிதாதிகள் உள்ளூர், வெளியூர் தினசரி வார, மாத, புதின பத்திரிகைகள் மற்றும் அறிவியல் பத்திரிகைகள்
தேசியலொத்தர் சபை அபிவிருத்தி சபை ரிக்கற்றுகள், பான வகைகள், குளிர்பானவகைகள் விற்பனையாளர்.

[illegible], ஆடியபாதம் வீதி,திருநெல்வேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர்க் கந்தன் நேற்று மாலைப் பொழுதில் மின்னொளியால் ஜொலிக்கும் சப்பறத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். சப்பறத்தில் உலா வருவதற்கு நல்லூரான் வள்ளி, தெய்வயானை சகிதம் எழுந்தருளிக் காட்சி கொடுப்பதை முதற்படத்திலும், சப்பறத்தில் பெருமான் அருள்காட்சி தருவதையும் பக்தர்களுடன் வேலவன் வீதிவலம் வருவதையும் படங்களில் காணலாம்.




# போராட்டம் எம்மீது திணிக்கப்பட்டது; அதனால்தான் ஈழத்தில் போராடுகிறோம்

## காசி ஆனந்தன் தெரிவிப்பு



நெல்லை, செப். 07

ஈழத்தில் நாங்கள் போராடவில்லை. போராட்டம் எங்கள் மீது திணிக்கப்பட்டது. அதனால்தான் நாங் கள் போராடுகிறோம் - என்று புரட்சிக் கவிஞர் காசி ஆனந்தன் தெரிவித்தார்.

வெள்ளைக்காரனை எதிர்த்து பூலித்தேவன் பாய்ந் தார். அதேபோல் தம்பி பிரபாக ரன் சிங்களவரை எதிர்த்து பாய்ந்தார் என்றும் அவர் தெரி வித்தார்.

நெல்லை மாவட்டம் நெற் கட்டும் சேவல் கிராமத்தில் விடுதலைப்போராட்ட வீரர் புலித்தேவனின் 295 ஆவது பிறந்த நாள் விழா நேற்று முன் தினம் கொண்டாடப்பட்டது.

தமிழர் தேசிய இயக்கத் தலை வர் பழ.நெடுமாறன், நடிகர் கரு ணாஸ், சசிகலா கணவர் எம்.நட ராஜன் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற் றினார்கள்.

புலித்தேவர் அறக்கட்டளைத் தலைவர் ம.நடராஜன் பேசும் போது, ஈழத்தில் தமிழர்கள் செத் துப் பிழைக்கிறார்கள். இங்கிருப் பவர்களோ கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஆட்சி தேவையா? ஆட்சிக்கு யார் வரு வது என்பது முக்கியமல்ல. யார் வரக்கூடாது என் பது தான் முக்கியம். எனவே அனைவரையும் ஒற்றுமையாக இருந்து இந்த ஆட்சியைத் தோற்கடிக்க வேண்டும் - என்று தெரிவித்தார்.

அங்கு பழ.நெடுமாறன் பேசுகையில், புலித்தே வன் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன். பிரபாகரன் மீண்டும் வருவார். இயக்கத்திற்கு தலைமையேற்று வழிநடத்துவார் - என்று கூறினார்.

இவ்விழாவில் கவிஞர் காசி ஆனந்தன் பேசுகையில், ஈழத்தில் 2 இலட்சம் தமிழர்கள் ஈவு இரக்க மற்று கொன்று குவிக்கப்பட்டனர்.

ஈழத்தில் நாங்கள் போராட வில்லை. போராட்டம் எங்களுக் குத் திணிக்கப்பட்டது. அதனால் தான் நாங்கள் போராடுகிறோம்.

வெள்ளைக்காரனை எதிர்த்து புலித்தேவன் பாய்ந்தார். அதே போல் தம்பி பிரபாகரன் சிங்கள வனை எதிர்த்து பாய்ந்தார். சிங்கள வரின் கொடுமை எத்தனை? எத் தனை? - என்று கூறினார். (ஒ-சி)







## அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சி, செப்.7

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித் துள்ளார். (ஒ-207)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈரவிழியுடன் ஆண்டொன்றில்...

மலர்வு 17 ✱ 02 ✱ 1934



உதிர்வு 19 ✱ 08 ✱ 2009

அமரர்

### வைரமுத்து சின்னம்மா

திதி : சதுர்த்தசி

தாயாகி எம்மை தாங்கிய தெய்வமே!
தரணி போற்ற வாழ்ந்த குல விளக்கே!
ஆண்டொன்று சென்றும் - தாங்கவில்லை எம் நெஞ்சங்கள்....!
அமைதி கொள்ளவில்லையே எம் நெஞ்சங்கள்...
தெய்வமே! விண்ணதில் அமைதியடையும் - நாம்
மண்ணதில் அமைதியடைவோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்...

கைதடி தெற்கு,
கைதடி. (103010) குடும்பத்தினர்.


# VISA - வீசா
Consultancy Service

**UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,**

Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas

Call : 0776 209 887

SIC, 734, Hospital Road, Jaffna.


## மரண அறிவித்தல்

### திருமதி விசுவலிங்கம் தங்கரத்தினம்

கட்டுவன் நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் தங்கரத்தினம் நேற்று (06.08.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிதம்பரம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - லட்சுமி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற விசுவலிங்கத்தின் மனைவியும் மல்லிகாதேவி, அன்னலட்சுமி, ஸ்ரீஸ்கந்தராஜா, புஸ்பராணி, மகேந்திரராஜா, சந்திரகுலராஜா (ஜேர்மனி), மதிவதனராஜா ஆகியோரின் பாசமிகு தாயும் தேவராஜா, தில்லையம்பலம், மனோரமா, கந்தசாமி, புஸ்பவதி, றாகினி (ஜேர்மனி), உதயராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் நடராசா, காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் அன்னரத்தினம், காலஞ்சென்ற குணராசா மற்றும் சிவராசா, நாகரத்தினம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (07.09.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஏழாலை குயத்தியோடை இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கட்டுவன்,
நாச்சிமார்கோயிலடி. (103024)

தகவல் :
மகன் - சந்திரகுலராஜா.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி இராசதுரை புஸ்பவதி

பிறப்பு 03.03.1952 — இறப்பு 10.09.2007

திதி : 07.09.2010



பாசமிகு அன்னையாய்,
குடும்பத்தின் ஒளி விளக்காய்
வாழ்ந்திட்ட எம் தாயே !
குடும்பக் கோயிலின் கோபுரதீபமே
எங்கள் வாழ்வின் விடிவெள்ளியே
மூன்றாண்டுகள் சென்றாலும் மாறாது எம் துயரம்
எத்தனை ஆயிரம் உறவுகள் தான் இருந்தென்ன?
அம்மா என்றழைக்க நீங்கள் இல்லையே எம்மருகில்.
உங்கள் பூஞ்சோலையில் பூத்துக் குலுங்கிய மலர்கள்
வாடி வதங்குவது உங்களுக்குத் தெரியவில்லையா?
அம்மா எம்மை விட்டுப் பிரிந்தாலும்
எங்கள் நினைவோடுதான் இருப்பீர்கள்
காலங்கள் மாறினாலும் காத்திரமாக நீங்கள்
எங்களோடு வாழ்ந்த காலங்கள் என்றும் மாறாது.

24/3, சாஸ்திரியார் லேன்,
அரியாலை. (சி/570728) குடும்பத்தினர்.

## வீடு வாடகைக்கு

நெல்லியடி பிரதான வீதியில் நகருக்கு அருகில் வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். (நிறுவனங்களுக்கு மட்டும்)

தொடர்பு : 0777049364

## முன்பள்ளி ஆசிரியர் தேவை

நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்க பாலர் பாடசாலைக்கு முன்பள்ளி ஆசிரியர் தேவை. தகுதியானவர்கள் தேவையான ஆவணங்களுடன் 10.09.2010 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாலர் பாடசாலையில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவும்.

தலைவர்,
நிர்வாகம்.

## படையினரால் கைவிடப்பட்ட சோதனைச் சாவடிகள் மீண்டும் புனரமைப்பு

யாழ்ப்பாணம், செப். 7

யாழ் கரையோரப் பகுதியில் படையினரால் கைவிடப்பட்ட படைமுகாம்கள், படையினரின் சோதனைச் சாவடிகளும் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

யாழ். கரையோரப் பகுதியில் கொட்டடியிலிருந்து குருநகர் அலுப்பாந்தி வரையில் இதுவரை கைவிடப்பட்டுச் சிதைந்த நிலையில் காணப்பட்ட சோதனைச் சாவடிகளே மீண்டும் 'உயிர்' பெற்று வருகின்றன. (ஒ-51)

## யாழ். நகரில் இருந்து இன்று காலை முதல் மருதுக்கு பஸ் சேவை

யாழ்ப்பாணம், செப். 7

மடுத்திருப்பதியில் நாளை புதன் கிழமை நடைபெறவுள்ள திருநாள் திருப்பலியில் கலந்துகொள்ள குடாநாட்டில் இருந்து செல்லும் பக்தர்களின் வசதி கருதி இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் சேவைகளை இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை முதல் ஆரம்பிக்கவுள்ளது.

மடுத்திருப்பதியை நோக்கி இன்று அதிகாலை 5.45 மணி தொடக்கம் பஸ்கள் சேவையிலீடுபடும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-51)

## சாரதி விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், செப். 7

கைதடி - நுணாவில் பகுதியில் நேற்றுமுன்தினம் வாகனத்தில்' இருந்து வீழ்ந்து பலியான சம்பவம் தொடர்பாக வாகனச் சாரதியை சாவகச்சேரி நீதிமன்றில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

சம்பவத்தில் பலியானவரின் சடலத்தை நேற்றுப் பார்வையிட்ட நீதிவான் சாவகச்சேரி மாவட்ட வைத்திய அதிகாரி மூலம் பிரேத பரிசோதனை நடத்திய பின்னர் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-207)

## மரண அறிவித்தல்கள்

### அருணாசலம் சுப்பிரமணியம்

(Rtd. Technical and Administrative Officer of Survey Department)



வெள்ளாம்போக்கட்டியைப் பிறப்பிடமாகவும் ஸ்ரேசன் அவனியூ கொடிகாமத்தை நிரந்தர முகவரியாகவும் இல. 33, கின்றோஸ் அவனியூ, பம்பலப்பிட்டியைத் தற்காலிக முகவரியாகவும் கொண்ட அருணாசலம் சுப்பிரமணியம் நேற்று (06.09.2010) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி அருணாசலம் தம்பதியரின் ஏக புதல்வனும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சின்னையா தம்பதியரின் அன்பு மருமகனும் சிவயோகமணி (ராசாத்தி) யின் அன்புக் கணவரும் Dr. சபேசன் (U.K), கோணேசன் (Newzealand), குமரேசன் (U.K), கவிதா (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சபேசன் (00441279834800)
கோணேசன் (006495280468)
குமரேசன் (00447944285265)

தகவல் :
மனைவி, பிள்ளைகள்.
T.P.: 0112553360

(103021)

### இலட்சுமணன் ஆச்சாரி சோமசுந்தரம்



பதுளையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கன்னாதிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இலட்சுமணன் ஆச்சாரி சோமசுந்தரம் நேற்று (06.09.2010) திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இலட்சுமணன் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் இரெத்தினசாமிப் பத்தர் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் இராதாமணியின் அன்புக் கணவரும் நாதன், பவானி, தேவிகா, காலஞ்சென்ற கண்ணன் மற்றும் சசிகலா, மலர்விழி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சாரதா, மோகன் (கொழும்பு), கிரிதரன் (நோர்வே), சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.09.2010) திங்கட் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வண்ணார் பண்ணை கோம்பயன்மணல் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6/5, கன்னாதிட்டி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (103013)

தகவல் :
சோ.நாதன் (மகன்).
T.P. : 0789136673

### நடராசா கனகலிங்கம்



யாழ். கொட்டடியைப் பிறப்பிடமாகவும் இல.68, அராலி வீதி, ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா கனகலிங்கம் நேற்று (06.09.2010) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா மற்றும் - ராசாத்தி தம்பதியரின் மகனும் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் விஜயகுமாரி, சுசிலா, ராஜகுமாரி, வஸ்கலா, கிரிசாந், தனுசாந் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.68, அராலி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 0777946261 (103026)

தகவல் :
குடும்பத்தினர்.


## மஹஜன சம்பத

சீட்டிழுப்பு இல. 2288
திகதி 05.09.2010

அலுவலக முடிவுகள்

வெற்றி எழுத்து: Y
வெற்றி எண்கள்: 4 1 8 2 6 7

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Y | 4 | 1 | 8 | 2 | 6 | 7 | ரூபா. 24,531,936/= | பரிசு | - |
| 1ம் பரிசுகள் | | 4 | 1 | 8 | 2 | 6 | 7 | ரூபா. 20,00,000/= | பரிசுகள் | 01 |
| 2ம் பரிசுகள் | | | 1 | 8 | 2 | 6 | 7 | ரூபா. 100,000/= | பரிசுகள் | 08 |
| 3ம் பரிசுகள் | | | | 8 | 2 | 6 | 7 | ரூபா. 10,000/= | பரிசுகள் | 72 |
| 4ம் பரிசுகள் | | | | | 2 | 6 | 7 | ரூபா. 1,000/= | பரிசுகள் | 728 |
| 5ம் பரிசுகள் | | | | | | 6 | 7 | ரூபா. 100/= | பரிசுகள் | 7223 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 7 | ரூபா. 20/= | பரிசுகள் | 72329 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 4 | 1 | 8 | 2 | 6 | | ரூபா. 10,000/= | பரிசுகள் | 09 |
| 8ம் பரிசுகள் | | 4 | 1 | 8 | 2 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் | 72 |
| 9ம் பரிசுகள் | | 4 | 1 | 8 | | | | ரூபா. 100/= | பரிசுகள் | 728 |
| 10ம் பரிசுகள் | | 4 | 1 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் | 7243 |
| 11ம் பரிசுகள் | Y | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் | 29023 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 24,708,642.00

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 7,594,290.00
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கும் வளமான நாட்டிற்கும்
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000 Hotline: 2433631

முடிவுகளை அறிய www.nlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சிகள் சக்திமிக்க வேட்பாளரை நிறுத்தும்வரை தேர்தலில் போட்டியிடுவேன்

## ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, செப். 07

ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகள் சக்திமிக்க வேட்பாளரொருவரை நிறுத்தும் வரை நான் ஜனாதிபதித் தேர்தலில் தொடர்ந்து போட்டியிடுவேன் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பின் போது தெரிவித்தார்.

பத்திரிகை ஆசிரியர்களை நேற்றுக் காலை ஜனாதிபதி அலரிமாளிகையில் சந்தித்தார்.

அப்போது பத்திரிகை ஆசிரியர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்து அவர் கூறியவை வருமாறு:-

''ஜனாதிபதி பதவிக் காலம் எத்தனை தடவைகள் என மக்கள் தீர்மானிக்க வேண்டும். மக்கள் விரும்பும் வரை ஒருவர் ஜனாதிபதியாக பதவி வகிக்கலாம். இந்தத் திருத்தம் ஜனநாயகத்துக்கு முரணானதல்ல.

நிறைவேற்று அதிகாரமிக்க பிரதமர் பதவியை உருவாக்கும் அரசியல் திருத்தத்துக்கு எமது தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் விருப்பம் தெரிவிக்கவில்லை. பேருவளையில் எமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்தரங்கொன்று சமீபத்தில் நடைபெற்றது.

நான் இக்கருத்தரங்கிற்கு பிந்திச் செல்லவேண்டியேற்பட்டது. அந்த நேரத்தில் எமது உறுப்பினர்கள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் முறை குறித்து ஒரு முடிவை எடுத்திருந்தனர். நான் அங்கு சென்றவுடன் அவர்கள் இத் தகவலை என்னிடம் தெரிவித்தனர்.

18ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு மக்களின் ஆணை கிடைக்கவில்லையே என பத்திரிகை ஆசிரியரொருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போது ஜனாதிபதி கூறியவை வருமாறு:-

சகல விடயங்களுக்கும் தனித்தனியாக மக்கள் ஆணை பெறத் தேவையில்லை. அத்துடன், இந்த அரசமைப்புத் திருத்தம் மக்களுக்கு நன்மை பயக்கும் விதத்தில் அமைந்துள்ளது.

18ஆவது அரசமைப்புத் திருத்தத்தை அவசர அவசரமாக நிறைவேற்றவேண்டிய தேவை என்ன? என்று பத்திரிகை ஆசிரியர் ஒருவர் எழுப்பியகேள்விக்கு ஜனாதிபதி இவ்வாறு பதிலளித்தார்.

சரியான சந்தர்ப்பத்தில்தான் அரசமைப்புத் திருத்தத்தை முன்வைக்கின்றோம். இன்னும் சில வாரங்களில் வரவு-செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப் படவுள்ளது. பின்னர் வரவு-செலவுத் திட்ட விவாதம் ஆரம்பமாகும். அரசமைப்புத் திருத்தம் சமர்ப்பிக்க தகுந்த நேரம் இதுதான் - என்றும் அவர் சொன்னார். (ஒ-சி)



ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் விஜய்குமார் சிங், நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கொழும்பிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் சந்தித்து கைலாகு கொடுப்பதையும், இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# நல்லூரான் உலா வரும் வேளை தூக்குக் காவடிகளுடன் வீதியினுள் வருவதைத் தவிருங்கள்!

யாழ்ப்பாணம்,செப்.7

நல்லூர்க் கந்தனை நாடி வரும் அடியார்களின் தூக்குக்காவடிகள் சுவாமி வீதி உலா வரும் வேளையில்- காலை 6 மணி முதல் 9 மணி முதல் வரையும் -

வீதித் தடைகளின் ஊடாக ஆலய வீதியினுள் செல்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வேண்டுகோளை விடுத்துள்ள யாழ். மாநகர முதல்வர் திருமதி யோ.பற்குணராசா நல்லைக்கந்தன் மகோற்சவம் அமைதியாக நடைபெற்று வருவதற்கு ஒத்துழைப்பு நல்கி வரும் அனைவருக்கும் தமது நன்றிகளையும் தெரிவித்துள்ளார்.

# யாழ். செயலகத்தில் மண்டேலா!

யாழ்ப்பாணம், செப். 7

யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்ட அரச அதிபர்கள் தென்னாபிரிக்க விடுதலை வீரர் நெல்சன் மண்டேலாவைத் தரிசித்தனர்.

தென்னாபிரிக்க கறுப்பின மக்களின் விடுதலைக்காகப் போராடிய நெல்சன் மண்டேலாவின் பன்முக ஆளுமைகளையும், வாழ்க்கை வரலாற்றையும் வெளிப்படுத்துகின்ற வகையில் உருவாக்கப்பட்ட மண்டேலா திரைப்படமே அரச அதிபர்களுக்கு நேற்றையதினம் காண்பிக்கப்பட்டது.

இந்தத் திரைப்படக் காட்சியைத் தொடர்ந்து, அதுதொடர்பான விளக்கவுரையை ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க நிகழ்த்த ஏற்பாடாகி இருந்தது. எனினும் திடீரென அவரது வருகை இரத்தானதால் பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன, சிறந்த தலைமைத்துவம் கொண்டதாக விளங்கிய மண்டேலா படம் தொடர்பான விளக்க உரையை அரச அதிபர்களுக்கு வழங்கினார். (ஒ-எ-9)

# தமிழ் எழுத்தாளர்கள் மாநாட்டை தமிழகத்தில் நடத்துவதே நல்லது

## இங்கு நடத்தினால் பிரச்சினை என்கிறார் சிவத்தம்பி

கொழும்பு, செப்.07

சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டை இலங்கையில் நடத்த இது உகந்த நேரம் அல்ல. இந்த மாநாட்டுக்கு இலங்கை அரசு அரசியல் சாயம் பூச முயற்சிக்கிறது. அது மாநாட்டைப் பிரச்சினைக்குரிய தாக்கிவிடும். ஆகவே, இந்த மாநாட்டைத் தமிழகத்தில் நடத்துவதே நல்லது''

- இப்படி பேராசிரியர் கா.சிவத்தம்பி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் எதிர்வரும் ஜனவரி 6,7,8,9 ஆம் திகதிகளில் சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு திட்டமிட்டபடி நடைபெறுமென மாநாட்டின் பிரதம அமைப்பாளர் வெ.முருகபூபதியும் மாநாட்டுக்கான இலங்கை இணைப்பாளர் டாக்டர் தி.ஞானசேகரனும் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவித்துள்ளனர். இந்த நிலையிலேயே பேராசிரியர் கா.சிவத்தம்பியின் வேண்டுகோள் வெளிவந்துள்ளது.

தற்போது ஆஸ்திரேலியாவில் வசிக்கும் வெ.முருகபூபதி முன்னர் இலங்கையில் இயங்கிவந்த முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முக்கியஸ்தர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தச் சங்கத்தினருக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில் அரச ஊடக நிறுவனங்களில் முக்கிய பதவிகள் வழங்கப்பட்டிருந்தன என்று இணையதளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த சர்வதேச எழுத்தாளர் மாநாட்டுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளிவரும் முன்பே தமிழக எழுத்தாளர் சங்கங்கள் இந்த மாநாட்டுக்கு எதிராகக் குரல் எழுப்ப ஆரம்பித்து விட்டன. இலங்கையில் நடைபெறும் இந்த மாநாட்டைப் பகிஷ்கரிக்கும்படி அந்த அமைப்புகள் உலகில் பரந்து வாழும் தமிழ் எழுத்தாளர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.

இந்த நிலையில்தான் இந்த மாநாட்டைத் தமிழகத்தில் நடத்தும்படி பேராசிரியர் நா.சிவத்தம்பி வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ-சி)

# ஜாதிக ஹெல உறுமய அரசுக்கு முழு ஆதரவு

கொழும்பு, செப்.07

அரசமைப்புத் திருத்த யோசனைகளுக்கு முழுமையான ஆதரவை வழங்கத் தீர்மானித்துள்ளதாக ஜாதிக ஹெல உறுமய கட்சி நேற்றுத் தெரிவித்தது. மக்கள் விரும்பும் ஒரு தலைவனை இரண்டு தடவைகள் ஆட்சியுடன் வீட்டுக்கு அனுப்புவது சரியில்லை என்றும் அக்கட்சி கூறியது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அக்கட்சியின் அமைச்சர் சம்பிக்க ரணவக்க மற்றும் மாகாணசபை அமைச்சர் உதய கம்மன் பில ஆகியோரே இவ்வாறு கூறினர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் கூறியவை வருமாறு:-

18ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவு வழங்க எமது கட்சி ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது. இந்தப் புதிய திருத்தத்தின் ஊடாக மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று நாம் உறுதியாக நம்புகிறோம்.

புதிய திருத்தத்தில் நாட்டுக்கு ஏற்படும் ஆபத்துகள் எவையுமில்லை. இந்த நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் வகையிலேயே திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்தத் திருத்தங்களால் சர்வாதிகாரம் தலைதூக்குவதற்கு இடமில்லை.

மக்கள் விரும்பும் ஒரு தலைவர் இரண்டு தடவைகள் மாத்திரம் நாட்டை ஆட்சி செய்துவிட்டு வீடு செல்வது நல்லதல்ல. அந்தத் தலைவன் தொடர்ந்தும் நாட்டை ஆட்சி செய்யவேண்டும்.

எதிர்க்கட்சிகள் புதிய திருத்த யோசனைகளுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. திருத்த யோசனைகளுக்கு அல்ல, மஹிந்த ராஜபக்ஷவுக்குத்தான் அவை எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. மஹிந்த ராஜபக்ஷவைப் பார்த்து இந்தக் கட்சிகள் பயந்து நடுங்குகின்றன.

உண்மையில் திருத்த யோசனைகள் இந்த நாட்டுக்குத் தேவையானவையே என்று எதிர்க்கட்சிகள் மறைமுகமாகக் கருதுகின்றன. ஆகவேதான், இப்படிப்பட்டதோர் அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவு வழங்க நாம் முன்வந்துள்ளோம்.- என்றனர். (ஒ-சி)

## ஐக்கிய நாடுகள் சபைப் பிரதிநிதியாக

# மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா 15ஆம் திகதி பதவியேற்கின்றார்

கொழும்பு, செப்.07

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான துணை நிரந்தரப் பிரதிநிதியாக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமை பதவி ஏற்பார் என வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக்குற்ற விசாரணைகள் மற் றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா.சபையின் செயலாளர் பான் கீ - மூன் தனக்கு ஆலோசனை வழங்க அண்மையில் நிபுணர் குழு ஒன்றை நியமித்தார். இந் நிலையிலேயே மேஜர் ஜெனரல் சவேந் திர சில்வாவின் நியமனமும் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.



தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிராக இறுதிக்கட்ட யுத்தத்தின் போது 58ஆம் படைப் பிரிவை சவேந்திர சில்வா வழிநடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

# ரயில் நிலைய அதிபர் பதவிகளுக்கு நாடெங்கும் 140 வெற்றிடங்கள்

கொழும்பு, செப்.7

ரயில் நிலைய அதிபர் தரம் III இல் நிலவும் 140 பதவி வெற்றிடங்கள் தொடர்பாக ரயில்வேத் திணைக்களத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

18 வயதுக்கு மேற்பட்ட 30 வயதைக் கடக்காத சிங்களம், தமிழ், ஆங்கிலம் மற்றும் கணிதத்துடன் மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் 6 பாடங்களில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளோர் மற்றும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்கள் சித்தியடைந்துள்ளோர் இப்பதவிக்கு விண்ணப்பித்துக்கொள்ள முடியுமென ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சையொன்றில் ஈட்டிக்கொள்ளும் திறமைகளின் அடிப்படையில் விண்ணப்பதாரிகள் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளதோடு உத்தியோகத்தர்கள் 5 ஆண்டு காலப் தகுதிகாண் நிலைக்கு உள்ளாவார்கள் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேற்படி தகுதிகாண் காலத்துள் ரயில் சேவைப் பயிற்சிப் பாடசாலையில் 6 மாத காலம் சேவை சம்பந்தப்படும் பயிற்சியும் வழங் கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.இதனிடையே ரயில் நிலைய அதிபர் பதவிகளுக்கான 300 வெற்றிடங்கள் தற்போது நிலவுவதாகவும் ரயில் நிலைய அதிபர்களின் சங்கம் தெரிவிக்கிறது. (த)

# அம்பாந்தோட்டைத் துறைமுகம் முற்றாக நீரால் நிரம்பவில்லை

கொழும்பு,செப்.7

கடலை அண்டிய புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு கோலாகலமாக விழாவெடுத்து நீர் நிரப்பி ஏறத்தாழ ஒருமாத காலம் ஆகிவிட்டுள்ள போதிலும் இன்னமும் அந்தத் துறைமுகம் முழுமையாக நீரினால் நிரம்பவில்லையெனத் தெரியவந்துள்ளது.

துறைமுக அதிகார சபையின் தகவல்களுக்கு அமைய நீர் நிரப்புவது தொடர்பாகத் துறைமுகத்தில் நிர்மணித்து முடிக்கப்பட வேண்டியுள்ள சில பகுதிகள் இன்னமும் முறைப்படி நிர்மாணிக்கப்படாமல் இருப்பதே அதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் இடம்பெற்ற துறைமுகத்துக்கு நீர்நிரம்பும் விழாவில் உரையாற்றிய ஜனாதிபதி ஒன்றரை மாத காலத்துள் துறைமுகம் முழுமையாக நீரினால் நிரப்பட்டு விடும் என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று துறைமுகத்துக்கு நீர் நிரப்பும் விழாவை ஒழுங்கு செய்வது தொடர்பாக பல கோடி ரூபாவை அரசு செலவழித்திருந்தது எனவும் என்று ஊடகங்கள் தெரிவித்தன. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச அதிபர்களின் செயற் திறன்மிக்க பணிகளுக்கு அனைத்து பணியாளர்களின் பங்களிப்பும் அவசியம்

## யாழ். செயலக மாநாட்டில் அமைச்சர் செனவிரத்ன

யாழ்ப்பாணம், செப். 7

அரசாங்க அதிபர்களின் செயற்திறன் மிக்க நடவடிக்கைகளுக்கு - பணிகளுக்கு- அனைத்து அரச பணியாளர்களும் தங்களது முழுமையான பங்களிப்பை நல்க வேண்டும். அதன் மூலம் எமது நாட்டை - எமது பிரதேசங்களைச் சிறந்த முறையில் கட்டியெழுப்ப முடியும்.

பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டின் 25 மாவட்டங்களினதும் அரச அதிபர்கள் மாநாடு யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு :-

இலங்கையிலுள்ள அரச திணைக்களங்களில் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை தொடர்ந்தும் காணப்படுகிறது. குறிப்பாக தொழில் நுட்ப அலுவலர்கள், காணி அலுவலர்கள் மற்றும் சிற்றூழியர் பதவிகளுக்கு வெற்றிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் உள்ளன.

இத்தகைய பதவி வெற்றிடங்கள் விரைவில் நிரப்புவதற்கான சகல நடவடிக்கைகளும் பொதுநிர்வாக அமைச்சு மேற்கொண்டுள்ளது.

எனவே, பல அரச திணைக்களங்களின் சேவைகளை மக்கள் ஓரிடத்தில் இலகுவான முறையில் பெற்றுக்கொள்வதற்கான வசதிவாய்ப்புகளை அரச அதிபர்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அத்தகைய சேவையை அரச அதிபர்கள் மேற்கொள்வதற்கு பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வேண்டும். அத்துடன் சிறந்த தலைமைத்துவத்தை அரச அதிபர்கள் கொண்டிருக்க வேண்டும் - என்றார்.

அரச அதிபர்களின் மாநாடு யுத்த சூழ்நிலைக்குப் பின்னர் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்த மாநாட்டில் பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் பிரதி அமைச்சர் டிலான் பெரேரா, இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களைச் சேர்ந்த அரச அதிபர்கள், மேலதிக அரச அதிபர்கள் மற்றும் பிர தேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-9-14)

## சாகஸ விமான விபத்தில் நியூஸிலாந்தில் 9 பேர் பலி!

நியூஸிலாந்தில் சாகஸ விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகி நடு வானில் வெடித்துச் சிதறியதில் 9 பேர் உயிரிழந்தனர்.

நியூஸிலாந்தில் கடந்த 17 ஆண்டுகளிலேயே மிக மோசமான விமான விபத்து இதுவாகும். அந்த விமானத்தில் விமானி ஒருவரும், விமான சாகஸப் பயிற்சியாளர்கள் 4 பேரும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 4 பேரும் இருந்தனர். விமான சாகஸத்தில் ஈடுபட அவர்கள் அதில் ஏறிப் பறந்தனர் எனத் தெரிகிறது.

அந்த விமானம் ஓடுதளத்திலிருந்து விண்ணில் பறந்த சிறிது நேரத்திலேயே தீப் பற்றி வெடித்துச் சிதறியது. இதில் அந்த விமானத்திலிருந்த 9 பேரும் உயிரிழந்தனர்.

# ரயில்களில் மோதுண்டு இருவர் மரணம்

கொழும்பு, செப். 07

வெள்ளவத்தை, பயாகலை ஆகிய பகுதிகளில் ரயில்களில் மோதுண்டு இருவர் பலியாகியுள்ளனர்.

பம்பலப்பிட்டிக்கும் வெள்ளவத்தைக்கும் இடையிலுள்ள ரயில் பாதையில் பயணித்துக் கொண்டிருந்த ரயில் மோதியதில் நேற்றுக்காலை ஒருவர் உயிரிழந்தார்.

கொழும்புக் கோட்டையிலிருந்து பாணந்துறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ரயிலிலேயே குறித்த நபர் மோதுண்டுள்ளார்.

பலியானவரின் சடலம் களுபோவிலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் இரவு பயாகலைப் பிரதேசத்தில் ரயிலில் மோதுண்டு 18 வயதான யுவதியொருவர் உயிரிழந்துள்ளார். பயாகலை வடக்கு மற்றும் பயாகலை தெற்கு ரயில் நிலையங்களுக்கு இடையில் சேவையில் ஈடுபட்ட ரயில் மோதுண்டு இவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-சி)

# ஆரியவதி சுயமாகவே தனது உடலில் ஆணிகளை ஏற்றச் சந்தர்ப்பம் உண்டு

## இலங்கை வைத்தியர் பேட்டி

கொழும்பு, செப். 07

சவூதியில் பணியாற்றிய இலங்கைப் பெண் ஆரியவதி சுயமாகவே தனது உடலில் ஆணிகளையும், ஊசிகளையும் அறைந்து கொண்டமைக்கான சந்தர்ப்பங்கள் உள்ளன - என்று இலங்கையின் மூத்த வைத்தியர்களில் ஒருவரும், பல்கலைக்கழக விரிவுரையாளருமான சுசிரத் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

சவூதி அரேபியப் பத்திரிகை ஒன்றுக்கு கொழும்பில் இருந்து தொலைபேசி மூலம் வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சவூதி எஜமானத் தம்பதிகளிடம் இருந்து தப்பிக் கொள்கின்றமைக்காக ஆரியவதி அப்படி நடந்திருக்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஏனையவர்களின் கவனத்தை ஈர்க்கின்றமைக்காக இம்மாதிரியான சம்பவங்கள் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

ஆரியவதி மனநலம் பாதிப்புக் காரணமாகவும் இவ்வாறு நடந்திருக்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

## அரசமைப்புத் திருத்தத்திற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமா?

புதிய திருத்தங்கள் எதுவுமே மக்களின் நல்வாழ்வுடன் தொடர்புபட்டவையல்ல. மஹிந்தவின் குடும்பத்துடனேயே இவை தொடர்புபட்டுள்ளன. இந்த நாட்டைத் தொடர்ந்தும் ஒரு குடும்பமே ஆட்சி செய்யும் வகையில் அரசமைப்பு திருத்தப்பட்டுள்ளது.

நாட்டுக்கு விரோதமான இந்தத் திருத்தத்தை நிறைவேற்ற நாம் அனுமதிக்கமாட்டோம். இதனைத் தோற்கடிக்கப் போராடுவோம். இதன் ஆபத்தை மக்கள் முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும். இதை நாம் அனைவரும் தோற்கடிக்க வேண்டும். - என்றார். (ஒ-சி)

## ஜே.வி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைப்புத் திருத்தத்துக்கு எதிராகத் தாங்கள் ஏற்கனவே மக்களுக்குத் தெளிவூட்டும் வகையில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துள்ளார்கள் எனவும் அவர் சொன்னார்.

இதுபோன்ற தொடர் எதிர்ப்பு நடவடிக்கைகள் நாளை புதன்கிழமை வரை தொடரும் எனவும் ரில்வின் சில்வா மேலும் தெரிவித்தார். (ஒ-சி)

## திஸ்ஸநாயகத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில் இம் மனுவைத் திரும்பப் பெறுகின்றாரென நீதிமன்றுக்குத் தெரிவித்தார். நீதிமன்றம் மனுவை திரும்பப் பெற அனுமதித்து மனுவைத் தள்ளுபடி செய்தது.

(ஒ-சி)


இன்று மாலை மெகா மெஜிக்

இந்தியாவில் இருந்து உலகப் புகழ்பெற்ற மாயஜால நிகழ்ச்சி

மூன்று காட்சிகள்

இடம்: நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்

ரிக்கற் மண்டபவாயிலில்..



100/= 200/=

T.P: 077 8060 225



ஆள்கள் தேவை

கிளி/உமையாள்புரத்தில் இயங்கிவரும் வெதுப்பகம் ஒன்றுக்கு பணியாள்கள் (பாஸ் உட்பட) தேவை.

தொடர்பு:- 0777952934


# அரசமைப்புத் திருத்தத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நேற்று நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் கூட்டத்தில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது. இதுகுறித்த அறிக்கை ஒன்றையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உத்தியோகபூர்வமாக நேற்று வெளியிட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம், நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் கொழும்பு அலுவலகத்தில் நேற்று மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி 7 மணி வரை நடைபெற்றது.

இக் கூட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதி ராஜா, சுரேஷ் பிரே மச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன், ஈ.சரவணபவன், பா.அரியநேத்திரன், பொன். செல்வராஜா, அ.விநாயகமூர்த்தி, பொ. பியசேன ஆகியோர் கலந்துகொண்டனர். வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்ட காரணத்தால் எஸ். யோகேஸ்வரன், வினோ நோகராதலிங்கம், எஸ்.சிறிதரன் ஆகியோர் இதில் பங்கேற்க முடிய வில்லை. சுகயீனம் காரணமாக சென்னை யில் தங்கியுள்ள தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் வழிகாட்டலிலேயே இக்கூட்டத்தின் முடி வுகள் எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டது.

இந்தக் கூட்டம் பற்றியும் இதில் எடுக்கப்பட்ட தீர்மானம் பற்றியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் 'உதயனுக்கு' நேற்றிரவு தெரிவித்தவை வருமாறு:-

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட உள்ள 18 ஆவது அரசமைப்புத் திருத்தம் ஒருவர் ஜனாதிபதியாக இரண்டு தடவைகளுக்கு மேலும் பதவி வகிக்கலாம் என்பதையே உள்ளடக்கியதாகக் கூறப்பட்டாலும், அது பல்வேறு வகைகளிலும் தமிழர்களின் நலனுக்கும், நாட்டு மக்களின் நலனுக்கும் பாதகமான அம்சங்களையே கொண்டுள்ளது.

### பெயரளவில் ஐவர் குழு

13 பக்கங்களில் சமர்ப்பிக்கப்படவுள்ள 18 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் ஒரே ஒரு வரி மாத்திரமே ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் தடவைகளை அதிகரிப்பது பற்றி கூறுகிறது. இது தவிர அது இன்னும் பல விடயங்களைக் கொண்டுள்ளது. குறிப்பாக 17 ஆவது அரசமைப்புத் திருத்தம் ஊடாக கொண்டு வரப்பட்ட அரசியல் சாசன சபையை இல்லாமல் செய்கிறது. இதனூடாக நாட்டின் நிர்வாக மட்டத்தின் அதியுயர் பதவிகளுக்கான சகல நியமனங்களையும் மேற்கொள்ளும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் என்பவற்றுக்கான நீதிபதிகள், தேர்தல் ஆணையாளர், பொலிஸ்மா அதிபர் போன்ற சகல உயர் நிலைப்பட்ட நிய மனங்களும் ஜனாதிபதியே வழங்க, 18 ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் வழி செய்கிறது.

பெயரளவில் ஒரு குழு நியமிக்கப் பட்டுள்ளது. பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பிரதமராலும் சபாநாயகராலும் நியமிக்கப்படும் இரண்டு உறுப்பினர்கள் கொண்ட ஐவர் இந்தக் குழுவில் இருப்பர். இது பேரளவில் மட்டுமே இருக்கும். இந்தக் குழுவுக்கு தலைவர் கூட கிடையாது. இந்தக் குழு வின் கருத்தையோ, சிபாரிசையோ ஜனா திபதி கேட்க வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. எனவே, தான் விரும் பிய நபர்களை, விரும் பிய பதவிகளுக்கு ஜனாதிபதி நியமிக்கலாம்.

### மாகாண பொலிஸ் ஆணைக்குழு அற்றுப்போகிறது

தேசிய பொலிஸ் ஆணைக்குழு என்ற விடயமும் ஒழிக்கப்பட்டு, இது தொடர்பான சகல அதிகாரங்களும் பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இதே வேளை, பொலிஸ்மா அதிபர் ஜனா திபதியால் நியமிக்கப்பட்டவராகவே இருப்பார். இதனூடாக பொலிஸ் அதிகாரமும் ஜனாதிபதியின் கையிலேயே இருக்கும். தேசிய பொலிஸ் ஆணைக்குழு என்ற விடயம் இல்லாமல் செய்யப்பட்டதன் ஊடாக 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் உள்ள மாகாண பொலிஸ் ஆணைக்குழு என்ற விடயமும் இல்லாமல் செய்யப்பட் டுள்ளது.

### 13 ஆவது திருத்தத்தில் உள்ள விடயங்கள் பறிப்பு

இதே போன்று மாகாண பொது நிர்வாக ஆணைக்குழுவும் இல்லாமல் செய்யப்பட்டு விட்டது. 13 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவோம்; அதற்கப்பாலும் பல விடயங்களைக் கொடுப்போம் என இது நாள் வரையும் இலங்கை அரசு கூறி வந்தது. ஆனால் இப்போது 18 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம், 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள பல விடயங்கள் பறிக்கப்பட்டுள்ளன. எனவே தமிழர்களின் அதிகாரப்பகிர்வுக்காக பாடுபடக்கூடிய கட்சிகள் எதுவும் 18 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை ஆதரிக்க முடியாது.

தமிழர் நலனைப் பாதிக்கும் வகையில் 18 ஆவது அரசமைப்புச் சட்டத்தை கொண்டு வந்து, 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள விடயங்களை இல்லாமல் செய்வதன் மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வை இன்னும் அதிக தொலைவுக்கு அரசாங்கம் கொண்டு சென்றுள்ளது.

### ஆதரித்தால் அது வரலாற்றுத் தவறு

இவ்வாறான சூழ்நிலையில் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக, மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த அரசமைப்புத் திருத்தச் சட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து அதன் பங்குதாரராக மாறமுடியாது. அத்துடன் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத் துமாறு கோரும் சில தமிழ்க் கட்சிகள் கூட 18 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட் டத்தை ஆதரிக்க முடியாது. ஏனென்றால் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள அதிகாரங்களை எல்லாம் புதிய திருத்தச் சட்டம் பறித்துவிடப் போகிறது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஜே.ஆர்.ஜெயவர்த்தன கொண்டு வந்தபோது அது ஜனநாயகத் துக்கு எதிரானது என்று எதிர்த்தவர் இன் றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. ஆனால் இப்போது கொண்டுவரப்படும் திருத்தம், அதைவிட மோசமாக ஜனநாய கத்தைப் பாதிக்கக் கூடியது. 18 ஆவது திருத்தச் சட்டத்தை ஆதரிப்பது என்பது வரலாற்றுத் தவறாகவே அமையும். தமிழ் மக்களுக்காக உழைக்கும் எந்தவொரு கட்சியும் இத்தகைய வரலாற்றுத் தவறை செய்ய முடியாது.

ஆகவே சிறுபான்மை மக்களின் உரிமைகளை மிகமோசமாகப் பாதிக்கக் கூடிய, ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைக்கக் கூடிய 18 ஆவது அரசமைப் புத் திருத்தச் சட்டத்தை ஆதரிக்க முடியாது; அதனை எதிர்ப்பது என்ற முடிவினை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எடுத்துள்ளது - என்றார். (அ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# நல்லூர் கந்தசுவாமி கோயில்

தேர்த் திருவிழாச் சிறப்புமலர் 07.09.2010

# யாழ்ப்பாணத்தின் அணிகலனாக மிளிரும் நல்லூர் முருகப்பெருமானின் ஆலயம்



அழகும், இளமையும், அளவிலா ஆற்றலும் பொருந்தி, ஞான பண்டிதராக எழுந்தருளி நலமருளும் சேயோன் முருகப் பெருமான். முருகப் பெருமான் கலியுகத்தில் கண்கண்ட தெய்வம். முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்போன் என்கிறார் அருணகிரிநாதர். ''தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன்னுற்றால் தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர்'' என்று கந்தபுராணம் பாடிய கச்சியப்ப சிவாச்சாரியார் கூறுகின்றார்.

தமிழ் மன்னர்கள் அரண்மனை அமைத்து ஆட்சி செய்த நல்லூர்ப் பதிக்கு அணிகலனாக விளங்குவது முருகப்பெருமானின் ஆலயமாகும். தமிழர்களின் வரலாற்றுப் பெருமை பேசும் நல்லூர்க் கந்தன் ஆலயம் இன,மத, மொழி கடந்து சர்வதேச மக்கள் அனைவராலும் மதிக்கப்படும் ஆலயமாகும். பூவுலக மக்களின் சிறந்த வழிபாட்டுத் தலமாக நல்லையம்பதி விளங்குகின்றது. தமிழ் மக்களின் போற்றுதற்குரிய முதன்மைத் தெய்வமாக முருகப் பெருமான் விளங்குகிறார். எங்கள் மண்ணில் நல்லூர் பதியில் எழுந்தருளி காட்சிதரும் வெற்றி வடிவேலனுக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. அச்சிறப்பை நல்லூர் மஹோற்சவ காலத்தில் அனைவரும் காணமுடியும். ஆடியும் பாடியும் அரோகராச் சொல்லியும் அடி அழித்தும் ஆனந்தமடையும் பக்தர் கூட்டம் இதற்கொரு சான்றாகும். இதனை முன்னிட்டே கொழும்புத்துறை யோகசுவாமிகள்

''நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி - கிளியே
இரவு பகல் காணேனடி''

என்று பாடிப் பரவசமடைந்தார்.

மகோன்னதமான உற்சவம் என்று சொல்லப்படும் மஹோற்சவத்தின் சிகரமாக அமைவது தேர்த்திருவிழா. தேர்த்திருவிழா அழித்தலைக் குறிக்கும். அழித்தல் என்பது ஆன்மாக்களைப் பீடித்துள்ள ஆணவ மலங்களை அழித்து அவை திருவருள் பெறுவதற்கான தகைமையைப் பெற்று வீடு பேறடைய வழிகோலலாகும். இன்றைய நன்நாளில் நல்லைக்கந்தன் தேரேறி வந்து எம்மைப் பீடித்துள்ள ஆணவ மலங்களை அகற்றி திருவருள் தர வருகிறார்.

தேரைத் தெய்வமயம், வேள்விமயம் எனப் பெருமைப்படுத்திக் கூறுவதால் தேர் பிரபஞ்சத்தின் குறியீடாக விளங்குகின்றது. மூலஸ்தானத்தில் இறைவன் விளங்குவது போல தேர்த் தட்டிலும் அவர் விளங்குகிறார். ''சில்லுகள் மூலம் அசையும் கோயில் போல'' தேர் விளங்குகின்றது.

அசைகின்ற கோயிலாகிய தேரிலே, நடமாடும் சிற்பமாகிய தேரிலே வள்ளி, தெய்வயானை சமேதராக ஆறுமுகப் பெருமான் எழுந்தருளும் அழகுக்காட்சியை, அற்புதக்காட்சியை நாமெல்லோரும் காணும் நாள் இன்றாகும்.

''மனித உடம்பாகிய தேரில் ஆத்மா தேரோட்டி, புத்தி சாரதி, மனம் கடிவாளம் என்பதை நீ அறிவாய்'' என யமதர்மராஜன் நசிகேதனுக்கு கடோபநிஷத்திலே தேர் மூலம் ஆத்ம ஞானக் கருத்தினைப் புகட்டியுள்ளான்.

தேரின் இருதயம் என்று சொல்லப்படுகின்ற பீடத்தில் முருகப் பெருமானை எழுந்தருளச் செய்ததும் தேர் ஓடுகிறது. எங்கள் இருதயமாகிய பீடத்தில் முருகப் பெருமானை எழுந்தருளச் செய்தால் வாழ்க்கைத் தேர் சிறப்பாக ஓடும்.

தேரடி என்றதும் யாழ்ப்பாண மக்களுக்கு நல்லூரான் தேரடியே நினைவில் வரும். கடையிற்சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள், மார்க்கண்டு சுவாமிகள் சோல்பரி பிரபுவின் மகன் சந்தசுவாமிகள் ஆகிய யோகிகள் நல்லூரான் தேரடியை நாடி தங்கள் ஆன்மீக தாகத்தைத் தீர்த்தவர்கள். கொழும்புத்துறை வாசிகளுடன் ஒருமுறை யோகநாதன் நல்லூரரை வணங்கி தேரடிப்பக்கம் போனார். யோகநாதனை உற்று நோக்கிய செல்லப்பர் ''யாரடா நீ பாரடா உள் தேரடா உள்'' என உறுமினார். இந்த மந்திர உபதேசத்தைக் கேட்ட யோகநாதன் அன்றே அருள் பெற்றார். யோகசுவாமிகளுக்கு மகாவாக்கியங்களான ''ஒரு பொல்லாப்புமில்லை'' ''எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்'' நாமறியோம் முழுவதுமுண்மை என்பவை தேரடியில் வைத்து வழங்கப்பட்டது. யோகர்சுவாமிகள் செல்லப்பரிடம் பெற்ற ஞானத்தை தமிழ் வேதம் எனப் போற்றக்கூடிய நற்சிந்தனையில் பாமரர் முதல் பண்டிதர் வரை படித்துணரக் கூடியதாக எமக்குத் தந்துள்ளார்.

யோகர் சுவாமிகளின் ஆச்சிரமம் கொழும்புத்துறையில் இருந்தாலும் அவரது உடல், பொருள், ஆவி எல்லாம் நல்லூரரையே நாடி இருந்தது. ''பஞ்சம் படை வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும் அஞ்சுவமே நாங்களடி ஆறுமுகம் தஞ்சமெடி'' என்றும் நல்லூர் வீதியில் வந்து விழுந்து கும்பிட்டால் எல்லா வில்லங்கங்களும் விலகி விடும் என்றும் கூறியுள்ளார்.

**உரும்பிராய் நந்தன்**

யோகர் சுவாமிகள் தமது சீடரான கைதடி மார்க்கண்டு சுவாமிகளை நோக்கி அவரது உடம்பைக் காட்டி இது தான் நல்லூர். இது தான் தேர் என ஆசிர்வதித்தார். ஆயினும் மார்க்கண்டு சுவாமிகளை கைதடியிலிருந்து நல்லூருக்கு நாள்தோறும் நடந்து செல்லுமாறும் நல்லூரான் தேரினைக் கட்டாயம் தரிசிக்க வேண்டுமென்றும் ஆசி கூறினார். மார்க்கண்டு சுவாமிகள் யோகர் சுவாமிகளிடத்தில் ''வடதிசை காட்டும் கருவியைப் போலிரு'' எனும் உபதேசம் பெற்று ஆருமறியாமல் அந்தரங்கமாக அருள் பெற்றார்.

இப்படியாக நல்லூரான் தேர்த்திருவிழாவில் நல்லூரான் தேரடியையும் அதில் தோந்த யோகிகள், அவர்தம் அடியார்களையும் மனத்திருத்தி நல்லைக் கந்தன் கழல் பணிந்து ஆன்ம ஈடேற்றம் பெறுவோமாக.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தசுவாமி கோயில்

தேர்த் திருவிழாச் சிறப்புமலர்
07.09.2010



யாழ்.மண்ணின் பழைமையையும் பெருமையையும் உலகமெங்கும் பறைசாற்றும்
நல்லைக் கந்தனின் இரத உற்சவமாகிய இன்று தேரேறி வரும் எம் பெருமானிடம்
நாட்டில் என்றென்றும் சுபீட்சமும் சமாதானமும் நிலவிட அவனருள் வேண்டி நிற்கின்றோம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தசுவாமி கோயில்

இரதோற்சவ சிறப்புமலர் 07.09.2010

## தேசத்துக்கு வளம் சேர்க்க ஆறுமுக சுவாமி தேரில் வாறார்

தேரில் வாறார் முருகன் தேரில் வாறார்
தேசத்துக்கு வளம் சேர்க்க தேரில் வாறார்

தேரில் வாறார் கந்தன் தேரில் வாறார்
வள்ளி தேவ மகளோடு தேரில் வாறார்

தேரில் வாறார் அழகன் தேரில் வாறார்
ஊர்கள் எல்லாம் திரண்டு நிற்க தேரில் வாறார்

தேரில் வாறார் வேலன் தேரில் வாறார்
பாடி ஆடி நாம் போற்ற தேரில் வாறார்

தேரில் வாறார் குமரன் தேரில் வாறார்
பக்தர்களைக் காத்திடவே தேரில் வாறார்

தேரில் வாறார் ஆறுமுகசுவாமி தேரில் வாறார்
நல்லைப் பதிதனில் நமக்கருள தேரில் வாறார்

கமலா, மீசாலையூர்.



## தேரேறும் திருக்குமரா...!

*பாரேழும் படைத்துக் காத்தழிக்கும் பரன்மகனே!*
*பாங்குறையும் வள்ளிதெய்வ யானையர்தம் காதலனே!*
*சீரேறும் தெய்வத் திருநல்லூர் நாயகனே!*
*தீங்ககற்றத் திருவேல் திகழ்கரத்திற் கொண்டோனே!*
*யாரோடு நாம்நோவோம்? யார்க் குரைப்போம்? துன்பங்கள்*
*யாவுமினிப் பறந்தோட யாமெல்லாம் நலம்வாழ*
*தேரேறுஞ் செல்வத் திருக்குமரா நீயருள்வாய்!*
*தேரூரச் சீரறங்கள் செழித்தோங்கத் தொழுதோமே!*

*யார் செய்த பாவமையா! யாதும் இழந்தின்று*
*யாம் கொள்ளும் சோகம் தீரவழி சொல்லையா!*
*பார்பூர்த்த பழமையொடு பண்பாடும் தொலைத்துவிட்டு*
*பாவியினம் இது மண்ணில் அழிகிறதே காத்திடையா!*
*சூர்மார்பு கிழித்துச் சூதெல்லாம் களைந்தெறிந்த*
*சுந்தரவேல் சும்மா தூங்கிக் கிடந்திடவா!*
*தேர்வார் திருமுருகா! செவ்வேட் பெருமானே!*
*திருக்கருணை ஈந்துஎமை தித்திப்பாய் வாழ வைப்பாய்*

த.நாகேஸ்வரன், சாவகச்சேரி.

'தொல்லை வினை தீர்க்கும் ஞானபண்டிதா முருகா! தோத்தரித்தோம் உன்னையே!! அருட்காட்சியது தாராயோ!!!'
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்குச் சிறந்த ஸ்தாபனம்
சிறி சிவாஞ்சனா நகையகம்
இல. 149A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே : 021 222 9227

முப்பொருளுண்மை உரைத்திட்ட முருகா...! எப்பொழுதும் உனைத் துதிக்கும்
எந்தனுக்கு அருட்பார்வையால் உன்னத நல்வாழ்வு தந்தருள் முருகா!
யாழ்.நகரில் அனைத்து ரக ஜவுளிகள், றெடிமேட் ஆடைகள், திருமண முகூர்த்தப்
பட்டுப்புடைவைகள், பான்ஸி வகைகள், பேபி நீட்ஸ் அனைத்துத் தெரிவுகளையும்
ஓர் இடத்தில் தெரிவு செய்திட சிறந்த தெரிவுகளின் சாம்ராஜ்யம்.
தரமும் விலையும் எங்கள் பாரம்பரியம்
G.S.லிங்கநாதன் அன் கோ
13, 14, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். 51, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 8107, 021 222 3139

மரகத மயிலேறி வேல் தாங்கும் முருகா! தேரேறி வந்து எம் துயர் துடைத்திடுவாய்!!

உங்கள் வைப்புக்களை
பன்மடங்காக
அதிகரித்துக்கொள்ளவும்
எதிர்காலத்தை
பிரகாசமாக்கிக் கொள்ளவும்
CIFL ஐ நாடுங்கள்



நிலையான வைப்புக்களுக்கு அதிகூடிய
வட்டி வீதத்தை வழங்கும் மத்திய
வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட
நிதி நிறுவனம்

★1 மாதம் 12 %
★3 மாதம் 13 %
★6மாதம் 13.5 %
★12 மாதம் 14.25 %

60 வயதுக்கு மேற்பட்ட மூத்த
பிரஜைகளின் அனைத்து
வைப்புக்களுக்கும் 1 % மேலதிகமாக
வழங்கப்படும்.

றன் உதான தங்க நகை அடகுச் சேவைக்கு
24 k 32,000/-
22 k 30,000/-

எமது சேவைகள்
★ நிலையான வைப்பு
★ மெகா மைனர் சேமிப்புக் கணக்கு
★ தங்க நகை அடகு சேவை
★ குறைந்த வட்டியுடன் சிறு முதலீட்டுக்கடன் வசதி
★ லீசிங்
★ பினான்ஸ்

அனைத்து விவரங்களுக்கும் கிளை முகாமையாளரை நாடவும்
சென்றல் இன்வெஸ்மன்ஸ் அன் பைனான்ஸ் லிமிட்டட் (CIFL)
56/15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

CIFL
Strength & Intergrity
Since 1966

T.P: 021 4921101/2
Fax: 021 4920292
E-mail: jaffna@cifl.lk
Web: www.cifl.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தசுவாமி கோயில்

தேர்த் திருவிழாச் சிறப்புமலர் 07.09.2010




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மூப்பில்லா மோகனனாய் காத்தருளும் நல்லூர்க் கந்தன்



முருகு என்றால் அழகு, இளமை, இனிமை, மணம், மகிழ்ச்சி, கவர்ச்சி என்று பொருள்படும். எனவே முருகன் அழகன். அழியா அழகுரு அவனுடையது. இளமை நலம் மாறாத ஏந்தல் அவன். மூப்பில்லா மோகனன், பாலசுப்பிரமணியன். குழந்தையாய், குமரனாய், கிழவனாய் (தலைவனாய்) ஆண்டியாய் சுவாமிநாதனாய், சுடரொளிப் பிழம்பாய் விளங்குகின்றான் முருகன். அடியவர் வினைதீர்க்க கடிதினில் வந்து விடிவினைத் தரும் வடிவேற்கரசன் அவன். அடியவரின் காவற்காரப் பெருமாள் என்று திருப்புகழ் செப்புகின்றது. இத்துணைப் பெருமை வாய்ந்த முருகன் நல்லூர் மூலஸ்தானத்தில் வேலாய் ஒளிர்கின்றான். வேலை விடாது கையில் பற்றி உள்ளதால் வேலே விளங்கு கையன் ஆயினன். அது சுற்றி நிற்கும் பகையெல்லாம் வற்றிவிடச் செய்து வெற்றியைத் தரும் அற்புதமுடையது. வேல் விளைத்த செயல்கள் அனந்தம்.

முருகப் பெருமானது வேலாயுதத்தால் கடல் அழிந்தது, கிரெஞ்சமலை பிளந்தது, சூரன் அழிந்தான், சிங்கமுகன் (கன்மம்) தாரகன் (மாயை) சூர் (ஆணவம்) ஆகியன அழிந்தன. எனவே மும்மலங்களும் தமது வலியிழந்து வருந்தியமுதன.

அஞ்ஞானம் அழிந்து மெஞ்ஞானம் தோன்றும்போது ஆண்டவன் காட்சி கிடைக்கும் என்பதும் அப்போது பேரானந்தப் பெருநிலை ஏற்படும் என்பதும் ஞானியர் வாக்கு குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும் அன்றங்கமரர் இடர் தீர்த்ததும் - இன்றென்னைக் கைவிடாது நின்றதுவும் கற்பொதும்பில் காத்ததுவும் மெய்விடா வீரன் கைவேல்.

முருகனை நினைத்தவுடன் நம்மனதில் வேல் தோன்றுவது அதன் அருமையையும் பெருமையையும் உணர்த்துகின்றது. அது கூர்வேல், போர்வேல், செவ்வேல், ஞானவேல், நவமாய செஞ்சுடர். வேலின் அமைப்பைப் பார்த்தால் அதன் நுனிப்பாகம் கூர்மை உடையதாகவும் நடுப்பாகம் அகலமுடையதாகவும் அடிப்பாகம் ஆழமுடையதாகவும் இருப்பதைக் காணலாம். அதைப் போன்றே அறிவும் கூர்மையும் அகலமும், ஆழமும் உடையதாய் இருக்கும் போதுதான் அகிலம் அளப்பரிய நன்மை அடையும்.

அரசாட்சியின் தலை நகரமாக அன்று விளங்கிய நல்லூர் அருளாட்சியின் அணி நகராக இன்று துலங்குகின்றது. அழகன் முருகனின் அரசாங்கம் அங்கு நடைபெறுகின்றது. அதிகாலையில் ஆலய மணியோசை கேட்கும்போது அப்பனே முருகா என்றே அனேகமானோர் துயில் எழும்புவர். நல்லையம்பதி அருள் மணக்கும் தெய்வீகபூமி வாழ்வின் முடிவு வருவதற்கு முன்னர். நல்லையை நண்ணி கல்லையொத்த மனத்தையும் கனிய வைக்கும் பன்னிரு கரத்தானான வள்ளல் வள்ளி மணாளனை நாமம் பல சொல்லி வணங்க வேண்டும் என்பதே இந்துக்களின் பேரவாவாகும்.

அடியார்கள் ஆசார சீலராய், மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து, கைதான் தலைவைத்து கண்ணீர் ததும்பி வெதும்பி கந்தனை வந்தனை செய்யும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். நல்லையில் கந்தனின் அருள் மணக்கும். அடியவரின் பக்தி மணக்கும். அந்தணர்களின் வேதபாராயண ஒலிமணக்கும். புராண விரிவுரைகள் மணக்கும். வீதிகள் தோறும் அரோகரா ஒலி ஓங்கி ஒலிக்கும். நல்லை மண்ணுக்கு இத்தகைய மகத்துவம் உண்டு. நல்லையில் கால்பட்டதுமே ஒருவித தெய்வீக உணர்வு ஏற்படும். மெய் சிலிர்ப்படையும். இது அனுபவ உண்மை.

ஆடி அமாவாசைக்கு ஆறாம் நாள் நல்லைக் கந்தனின் ஆண்டு மகோற்சவம் ஆரம்பமாகி இருபத்தைந்து தினங்கள் நடைபெற்று கந்தனின் திருக் கல்யாணத்துடன் நிறைவுறும். இக்காலப் பகுதியில் யாழ்ப்பாண நகரமே விழாக் கோலம் பூண்டிருக்கும். நல்லையம்பதி இந்திரலோகம்போலக் காட்சியளிக்கும். பக்தர்கள் பரமன் மகனை நாடி வந்து எல்லோரும் ஒன்றாய்க்கூடி அவன் அருளில் ஊடி, காவடி ஆடிப் பாடி பரவசமடைவர். நேசமாய் கந்தனது வாசமலரடி நித்தம் துதிப்பவர் தேசுமிக்க சித்தம் ஒன்றிய பாசமறுத்த பக்தர்களேயாவர்.

நல்லூர் தேரடி அருள் வளம்மிக்கது. தவசிரேட்டர்கள் செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் வாழ்ந்த இடம். அதன் அயலிலுள்ள வில்வ மரத்தைச் சுற்றி வந்து வணங்கினால் நற்கதிக்கு வழிகாட்டுமென்பர். செல்லப்பன் என்ற திருப்பெயரைக் கொண்டவரை பித்தன் என்றுபலர் பேசித் திரிந்தனர். ஆனால் அவரின் வெற்றியைப் பிறர் அறியாத் திறத்தினராவர். அவரையே தனது குருநாதராகக் கொண்டார் யோக சுவாமிகள். ஒரு பொல்லாப்புமில்லை, எப்பவோ முடிந்த காரியம், நாமறியோம், முழுதும் உண்மை என்னும் நான்கு வாக்கியங்களே செல்லப்பர் யோகருக்கு அருளிய மகா வாக்கியங்களாகும். ஆரடா நீ, தேரடா உன், தீரடா பற்று, பாரடா வெளியில் என்று வாசக தீர்க்கை அளித்தவர் செல்லப்பர். இத்தகைய மகான்களாலும் நல்லூரின் நலம் விளங்குகின்றது. குரு பரம்பரையை உற்பவித்த பூமி அது.

சைவமும் தமிழும் வளர்த்த் ஆறுமுகநாவலர் பிறந்தவூர் நல்லூரேயாகும். நல்லையில் அமைந்துள்ள திருஞானசம்பந்தர் ஆதீனத்தினாலும் நல்லையின் புகழ் பரவியுள்ளது. தமிழ் நாட்டிற்கு கிருபானந்த வாரியார் போல ஈழத்திற்கு மணிபாகவதர் புகழ் சேர்ந்தவர். கந்தனின் வரம் பெற்று பிரசங்கப் பீரங்கியாகத் திகழ்ந்து அரங்கில் அனைவரையும் கவர்ந்து கரகோஷம் பெற்றவர். அவரின் சமாதியும் ஆதீனத்தின் பின்புறம் உள்ளது. எனவே நல்லூர் உண்மையில் நல்ல ஊரேயாம். எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினால் இடர்கள் எல்லாம் போகும். தேவர் சிறை மீட்ட செல்வன் திருவடிகள் எமக்கு நல்ல காவல் அளிக்கும். யாழ்ப்பாண மக்களின் குலதெய்வம் நல்லூர் முருகன்.

திருமதி பரமேஸ்வரி சிவராமலிங்கம்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லூர் கந்தசுவாமி கோயில்

இரதோற்சவ சிறப்புமலர் 07.09.2010



## துன்பங்கள் போக்கிட காத்தருள் முருகா!

நல்லையம்பதியில் கோயில் கொண்டு நல்லருள் பாலிக்கும் முருகா!
துன்பங்கள் போக்கி இன்பங்கள் வளர்ந்திட
பக்தர்களுக்கு துணை புரிவாய் கந்தா.....!
நல்லையில் பக்தர்கள் புடைசூழ தேரேறி
அருள்புரிவாய் குகனே! கந்தா கடம்பா முருகா என
பக்தர்கள் கூடி அழைத்திட
ஒளி வீசி அருள் புரிவாய் கந்தனே!

கு. மீராம்பாள்,
கொல்லங்கலட்டியூர்.

## ஆனந்தம் தந்திட தேரேறி வருகின்றான்

நல்லூரில் வீற்றிருக்கும் எங்கள் முருகன்
நலன்களெல்லாம் தந்திடுவான் எங்கள் முருகன்
அபயம் அளித்தருளிடுவான் எங்கள் முருகன்
ஆனந்தம் தந்திடுவான் எங்கள் முருகன்
தொல்லைகள் நீக்கிடுவான் எங்கள் முருகன்
தேரேறி வருகின்றன் எங்கள் முருகன்
எல்லையில்லா அழகனவன் எங்கள் முருகன்
எல்லோரையும் காத்திடுவான் எங்கள் முருகன்
குன்றிலாடிய குமரனவன் எங்கள் முருகன்
குறவள்ளிக் கந்தனவன் எங்கள் முருகன்
துயரங்கள் நீக்கிடவே எங்கள் முருகன்
தேரேறி வருகின்றான் எங்கள் முருகன்

அ. லோகநாதன்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர்.




தேரேறி வந்திடும் தேவசேனாதிபதியே முருகா!

இளவரசி சேலைச் சோலை
(பட்டுப் புடைவைகளின் சாம்ராஜ்யம்)

ELAVARASI TEXTILE
(SPECIALIST IN WEDDING SAREES)

57 நவீன சந்தை, யாழ்ப்பாணம்.தொ.பே: 021 222 2503



நல்லையம்பதி வேலவா! நலம் காக்கும் முருகா!! தேரேறி வந்த எமது குறைகளைத் தீருமையா!

கலைமகள் அழகு நிலா
பயிற்சி நிலையம்

ஏழு நாள்கள் பயிற்சிகள் இடம்பெற்று பயிற்சியின் நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும். இப்பயிற்சி யின் மூலம் ஒரு அழகு நிலையம் நடத்தும் திறமையைப் பெற்றுக்கொள்ளலாம். இப்பயிற்சி கற்றுக்கொள்வது இலகு வானதும் அதிக வருமானம் தரக்கூடிய தொழிலுமாகும். பெண்களுக்கு மிக அவசியமானது. வயதெல்லை கிடையாது. கீழ்வரும் பயிற்சிகள் அனைத்தும் செயன் முறையாகும்.

★ சனி, ஞாயிறுதினங்களிலும் பயிற்சிகள் இடம்பெறும்

பயிற்சிகள்

★ Facial (எட்டு வகை)
★ Threading
★ Pimple Treatment
★ Waxing
★ Hair Stretening (2 வகை)
★ Hair Perming
★ Hot Oil massage
★ Hair Cutting
★ Hair dye
★ Hair Colouring
★ Pedeicure manicure
★ கறுப்புக்காய்கள் இயந்திரம் மூலம் அகற்றப்படும்.
★ Bleaching
★ Bridal make up (6வகை)

பயிற்சிக் கட்டணம்: 4000/=, பயிற்சி ஆரம்பம்: 10.09.2010
பயிற்சி நேரம்: மு.ப 9.30மணி-பி.ப. 4 மணிவரை.

கலைமகள் அழகு நிலா
390, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0773719071, 0214908151.







அல்லல் தீர்த்து எமைக் காக்கத் தேரேறி வருகின்றான்!
அடியவர்க்கு அபயமளிக்கத் தேரேறி வருகின்றான்!!

தரமான நவீன கணனிகள், உதிரிப்பாகங்கள், மற்றும் மின்சார இலத்திரனியல் பொருள்களை கொள்வனவுசெய்திட

World's No 1

Abans
நிறுவனத்தின் உத்தரவாதத்துடன் இலவச விநியோகசேவையைப் பெற்றிட

Midea
Electro Mart

Authorized Dealer for Abans Ltd.

e-mail: midea21@gmail.com

No: 1-1, 1-H, Stanley Road,
Jaffna, SriLanka.
T.P: 021 222 4566, Fax:021 222 1646.







சிங்கார வேலவனே தேரேறி வாருமையா!

✓சிக்கன் புரியாணி ✓சிக்கன் பிறைட்றைஸ்
✓சிக்கன் கொத்துறொட்டி ✓நூடில்ஸ்புரியாணி
✓ மட்டன் புரியாணி ✓மட்டன் றோல்ஸ்
✓மீன் சாப்பாடு ✓குளிர்பான வகைகள்
✓ ஐஸ்கிறீம் வகைகள்

அனைத்தும் அதி உயர்ந்த தரத்தில் வழங்கப்படும்

அனைவரும் ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்

சுவை
சுத்தம்
தரம்

டிலன் ஹொட்டல்

இல.133, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 0212224136


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தசுவாமி கோயில்

இரதோற்சவ சிறப்புமலர் 07.09.2010

வாழ்த்தி வணங்குகிறோம்
வந்திடுவாய் தேரேறி

வன்னி மாந்தர் துயர் துடைக்க
உற்ற துணை நீ தானே நம்
எண்ணிய கருமங்கள் ஈடேற
ஏற்ற வரம் ஈந்திடுவாய்
ஊரின் பெருமை சிறக்க
தமிழனத்தின் வாழ்வு சிறக்க
எம்மைக் காப்பாய்
நல்லூரின் வேலவனே!
வாழ்த்தி வணங்குகிறோம்
வந்திடுவாய் தேரேறி

மாருதி,
ஆவரங்கால்.


"குருவாய் வருவாய் அருள்வாய் குகனே" நல்லை நாதப் பெருமான் திருவருளுக்காகப் பிரார்த்திக்கிறோம்.

ஷாம்பவி பதிப்பகம்
ஷாம்பவி முத்ரணாலய
SP Shampavi Printers
shampavi2009@gmail.com

புத்தம் புதிய திருமண அழைப்பிதழ்கள், மற்றும் மங்கலகரமான நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்கள், விளம்பர பதாதைகள் இன்ரர்ரீஸ் லேபல்கள் மற்றும் பாடசாலைகள் நிறுவன சஞ்சிகைகள்,மற்றும் பொலித்தீன், துணி, பிளாஸ்ரிக் என்பவற்றில் புதிய நவீனமுறையில் அச்சமைப்பு, பொலிமர் இறப்பர் முத்திரைகள் குறித்த நேரகாலத்தில் நீங்கள் விரும்பிய டிசைன்களில் பெற்றிடவும் இன்றே விஜயம் செய்யுங்கள்

276. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T. P. 021 2224143
077 6184425
கரந்தன் வீதி, நீர்வேலி.

பன்னிருகை வேலவனே முருகா
பக்தர்குறை தீர்க்கவேண்டும் கந்தா!

நவநாகரிக நவீனமய ஆடைகள்,
புத்தம் புதிய சாறி வகைகள்,
நங்கையருக்கேற்ற ஜவுளிகள்
அனைத்துக்கும் அதி சிறந்த
உன்னதமான இடம்

மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்
MILLENNIUM FASHION & BOMBAY BAZAAR

இல.10, 11, POWER HOUSE RD,
GRAND BAZAAR, JAFFNA.
(மலாயன் கபே முன்பாக)

T.P: 021 222 9399





நல்லைக் குமரா தேரிலே எழுந்தருளி வருக! வருக!! வருக!!!

சாரங்கா நகைமாடம்
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.No: 222 6972, 8917, 2480, Fax. No: 222 8869

இணை நிறுவனம்
சாரங்கா ஜுவல்லறி
இல.55, செட்டித்தெரு, கொழும்பு - 11,
TEL: 2434971. FAX: 0112434071

இன்று தேரேறி அடியார்களுக்கு காட்சி தரும் சிங்கார வேலனுக்கு அரோகரா!

With the Best Compliments From:

ESWARRAN
Traders & Transport Service

ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேர்வீஸ்
அதிசொகுசு பஸ்சேவை
யாழ்ப்பாணம் ⟺ கொழும்பு

GENUINE TRANSPORT SERVICE






ESWARRAN
Traders & Transport Service

இல.115, 69,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212222813/2224317/0773865439


இல.01, கரடிப்போக்கு,
கிளிநொச்சி. (செலான் வங்கிக்கிளை அருகில்)
தொ.பே: 0212285306
பக்ஸ்: 0212285307

இல.201B, டாம் வீதி,
கொழும்பு-12
தொ.பே: 0112433889
பக்ஸ்: 0112435247

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தசுவாமி கோயில்

தேர்த் திருவிழாச் சிறப்புமலர் 07.09.2010



## துயர் தீர்க்க வாராயோ முருகா!

நல்லை எனும் நகரில்
நலம் தருபவனே
உன்திருவடி தரிசித்தால்
தொட்ட கவலை நீங்கிடும்
தேரடி மைந்தா வீதியுலா வந்து
நம் வினை தீர்ப்பாயே
ஆறுபடை வீடுகளை உடையவனே
ஆறுமுருகனே ஐயனே
நல்லையில் இருந்து நம் துயர்
தீர்க்க வாராயோ முருகா

சி. சாருஜன்,
யா/கனகரத்தினம் ம. ம. வித்தியாலயம்.

## தமிழ் விளையாடும் பெருமானே

தனித்தமிழ் அமுதம் தருவோனே
தங்கமயில் மீதினில் வருவோனே
இனிக்கும் தேன்தினை சுவைப்போனே
இடர்களைந் தருளும் இறையோனே
கனியின் சுவையில் மகிழ்வோனே
கலியுக வரதனும் நீதானே
புனிதம் மிகுநல் அடியவர்கள்
